பொருள் தியாகத்தின் முக்கியத்துவம்
பக்கம் 3

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் ‘தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்’ (தொடர்–5)
பக்கம் 13

துன்பத்தின்போது பிறர் தரும் ஆறுதலின் தாக்கம் இறை அறிவிப்பின் தேவைக்கு ஓர் ஆதாரம்!
பக்கம் 17

அல்லாஹ்வின் அன்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமே பெற முடியும்
பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | July 2025 | Vol. 4 - Issue No. 8



Ahmadiyya Muslim Jama’at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311




தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ், தான் நாடியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனும் ஆவான்.

(திருக்குர்ஆன் 2:262)



# திருக்குர்ஆன்

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ
سِرًّا وَّ عَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ
رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ
يَحْزَنُوْنَ ‏

தங்களுடைய செல்வங்களை இரவிலும், பகலிலும், மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் வழியில்) செலவு செய்பவர்களுக்கு, அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி (பாதுகாக்கப்பட்டு) உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை; அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (2:275)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم
" مَا مِنْ يَوْمٍ يُصْبِحُ الْعِبَادُ فِيهِ إِلاَّ مَلَكَانِ يَنْزِلاَنِ
فَيَقُولُ أَحَدُهُمَا اللَّهُمَّ أَعْطِ مُنْفِقًا خَلَفًا .
وَيَقُولُ الآخَرُ اللَّهُمَّ أَعْطِ مُمْسِكًا تَلَفًا " .

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின் –றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு வானவர்கள் இறங்காத எந்தவொரு காலைப் பொழுதும் அடியார்களுக்கு வருவதில்லை. அதில் ஒருவர் கூறுகிறார்: அல்லாஹ்வே! (இறைவழியில்) செலவு செய்பவருக்கு இன்னும் அதிகம் வழங்குவாயாக. மற்றவர் கூறுவார்: (செலவு செய்யாமல் செல்வத்தை) தடுத்துக் கொள்பவருக்கு அழிவை இறக்குவாயாக. (முஸ்லிம் ஹதீஸ் எண் 1010)

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபா பெருமக்கள் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் சஹாபா பெருமக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றின் ஒளியில்**

# பொருள் தியாகத்தின் முக்கியத்துவம்

மதிப்பிற்குரிய மவ்லவி ரஃபீக் அஹ்மத் பேக் சாஹிப் (நாஸிர் பைத்துல் மால் ஆமத் காதியான்)

தமிழாக்கம்: இப்னு வஸீம்



அல்லாஹ் திருக்குர்ஆனில் பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் தொடர்பாக எடுத்துரைத்தவாறு கூறுகிறான்:

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ
سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ
وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ
كَمَثَلِ جَنَّةٍ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ
فَطَلٌّ ؕ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ், தான் நாடியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனும் ஆவான்.

தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்திகளைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம், உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானதாகும். அதன் மீது பெருமழை பொழிகின்றபோது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகின்றது. மேலும் அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும், மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். (அதிகாரம் அல் பகரா 2:262,266)

அல்லாஹ் இவ்விரு திருவசனங்களிலும் மிகத் தெளிவான முறையில் இவ்வாறு கூறியிருக்கிறான்: அல்லாஹ்வின் வழியில் பொருள் செலவு செய்பவர் ஒருபோதும் பொருள் செலவு செய்வதனால் வீண்போவது -மில்லை; இழப்படைவதுமில்லை. மாறாக, அவரது பொருளில் அசாதாரணமான செழிப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஒரு தானியம் பூமியில் விதைக்கப்படுவதன் மூலமாக அதன் 7 கதிர்கள் முளைக்கின்றன. ஒவ்வொரு கதிரிலும் 100 தானியங்கள் இருந்தால், 7 கதிர்களிலிருந்து 700 தானியங்கள் வெளி வருகின்றன. இன்னும் சொல்வதென்றால், அல்லாஹ் நாடினால் அதை விட அதிகம் வெளிவர முடியும். மேலும், ஒரு தானியத்தில் இருந்து பலநூறு தானியங்களை எடுக்க முடியும் என்பது தற்காலிக அறிவியல் காலகட்டத்தில் நிரூபணமாகி விட்டது.

ஆக, அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு, ‘நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்பிய வண்ணம் எந்த நல்ல பணியில் பொருள் செலவு செய்தாலும் உங்கள் செல்வமும் குறையாது. தோட்டங்களும் ஒருபோதும் வீண் போகாது. வாணிபமும் சோடை போகாது. நீங்கள் இழப்படையவும் மாட்டீர்கள். மாறாக, ஒவ்வொரு பணியிலும் அசாதாரணமான பரக்கத்துகள் கிடைக்கப்பெறும் என்று நம்பிக்கையூட்டுகிறான்.

இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் மக்களே இறைவனை (உண்மையாக) நேசிப்பவர்கள் ஆவார்கள். அந்த அன்பிற்குரியவன் எப்போது திருப்தி அடைவானோ என்ற இந்தக் கவலையிலேயே அவர்கள் இரவு பகலாக மூழ்கி இருக்கிறார்கள். செல்வத்தையும் ஆன்மாவையும் மீண்டும் மீண்டும் அவனுக்குக் கொடுத்து விட்ட பிறகும் (நாம்) தகுதியற்றவர்கள் என்ற அச்சமே (அவர்களின்) உள்ளத்தில் இருக்கிறது.

துவக்கக் காலகட்டத்தின் நம்பிக்கையாளர்கள் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்தவாறு, இந்த இரண்டு வசனங்களிலும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள அந்த அருள்களிலிருந்து பயனடையந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய சஹாபா (ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) தமது நிகரற்ற தியாகங்கள், அர்ப்பணிப்புகள் மற்றும் அளவற்ற அன்பு நேசத்தின் மூலம் இறைவனுக்காக மாய்த்துக் கொள்ளுதல் மற்றும் தூதருக்காக மாய்த்துக் கொள்ளுதல் என்ற தரத்தைப் பெற்று நிரந்திரமாக உலகத்திற்கு ஒரு நிகரற்ற முன்மாதிரியை நிலைநாட்டி விட்டார்கள். நிச்சயமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலகட்டம் உலக வரலாற்றின் பொன்னான காலகட்டமாகத் திகழ்ந்தது என்பதை அவர்கள் தம்முடைய அமல்களின் மூலமாக நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஏனெனில், அந்த கண்ணியத்திற்குரிய சஹாபா பெருமக்களே

தான் يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْٓا اَنْصَارَ اللّٰهِ அதாவது, 'நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவியாளர்கள் ஆகிவிடுங்கள்' என்ற அல்லாஹ்வின் ஓசையை செவியேற்ற உடனேயே, 'நாங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவியாளர்கள் ஆவோம்' என்று கூறியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பாதங்களில் தம்முடைய வாழ்வுகளை அர்ப்பணித்து விட்டார்கள்.

பொருள் தியாகம் செய்யுமாறு கூறப்படும்போது, சஹாபா தமது வீடுகளிலிருந்து கிடைத்ததை எடுத்துக் கொண்டு வந்து அன்னார் முன் சமர்ப்பித்து விடுவார்கள். நன்மையான பணிகளில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்லும் போட்டி இருந்து வந்தது. ஒரு தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கூட வீட்டிலிருந்து செல்வத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'உமரே! நீர் என்ன கொண்டு வந்துள்ளீர்?' என்று வினவினார்கள். அப்போது அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது செல்வத்தில் பாதியைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்று பதிலளித்தார்கள். இவ்வாறே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் வினவப்பட்டது. அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது முழு செல்வத்தையும் கொண்டு வந்திருக்கிறேன். வீட்டில் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் பெயரை விட்டு வந்துள்ளேன்' என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைத் (ரலி) அவர்களிடம் மிகவும் குறைவான சொத்து இருந்தது. மிகவும் நெருக்கடியான முறையில் மனைவி மக்களின் வயிற்றை நிரப்பி வந்தார்கள். ஆனால், ஒரு நேரம் வந்தது! அப்போது இஸ்லாத்திற்குப் பொருள் தேவை இருந்தது. அதைப் பூர்த்தி செய்வதற்காக சந்தா வழங்குமாறு அறிவிக்கப்பட்டது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களிடம் செல்வம் குறைவாகத் தான் இருந்தது; ஆயினும், உள்ளத்தில் ஈமானிய வெப்பம் இருந்தது. அதனால், நிர்பந்தந்திற்குள்ளாகி அவர்கள் தம்மிடம் இருந்த அனைத்தையும் இறைவழியில் கொடுத்து விட்டார்கள். அவர்களின் தந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முறையிடும் விதத்தில் இதைப் பற்றிக் கூறினார். அப்போது அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களை அழைத்து, 'இறைவன் உமது சதக்காவை ஏற்றுக் கொண்டு விட்டான். ஆனால், இப்போது உமது தந்தையின் மரபுரிமைச் சொத்தாக உமக்குத் திருப்பித் தருகிறான். நீர் அதை ஏற்றுக் கொள்வீராக' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் 17-18 வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் மிக அதிகமாக, உயிரை அர்ப்பணிக்கும் வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகத் துணிச்சலாக முன் நின்றார்கள். ஆனால், பொருள் தியாகம் செய்யும் விதத்திலும் அவர்கள் யாரையும் விட பின்தங்கி இருக்கவில்லை. போர்களின் செலவுகளுக்காகத் தமது செல்வத்தை முன் வைப்பதாக உறுதி எடுத்திருந்தார்கள். இந்த உறுதிமொழியை மனஉறுதியோடும் நிரந்தர தன்மையோடும் நிறைவேற்றினார்கள். தபூக் போரின்போது, பொதுவாக முஸ்லிம்கள் வறுமையில் மூழ்கியிருந்தபோது, போர்த் தளவாடங்களைக் கிடைக்கச் செய்வதில் மிக அதிகமாக சிக்கல் ஏற்பட்டிருந்தது. இவர்கள் ஒரு பெரிய தொகையை முன்வைத்தார்கள். இதனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களுக்கு வள்ளல் பட்டம் வழங்கினார்கள்.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ

பொருள்: 'சில மனிதர்கள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திக் காட்டினர்.' (அதிகாரம் அல் அஹ்ஸாப் 33:24)

இந்தத் திருவசனம் இறங்கியபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'தல்ஹாவே! நீரும் அந்த மக்களைச் சேர்ந்தவர் ஆவீர்' என்று கூறினார்கள்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

(அதிகாரம் ஆல இம்ரான் 3:93)

என்ற வசனம் இறங்கிய போது, அந்தத் தருணத்திலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், பின்பற்றத்தக்க முன்மாதிரியைக் காட்டியவாறு பைருஹா எனும் தோட்டத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரலி) அவர்கள் இளமைப் பருவத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் மிகப் பெரிய வாணிபராகவும் மிகப் பெரிய செல்வந்தராகவும் திகழ்ந்தார்கள். ஆனால், செல்வத்தை சிறிதும் நேசிக்கவில்லை. மாறாக, அதை இறைவழியில் செலவு செய்வதிலேயே மகிழ்ச்சி அடைந்து வந்தார்கள். ஒருமுறை அவர்களின் வாணிபக் குழு மதீனா வந்தது. அப்போது அதில் 700 ஒட்டகங்கள் மீது கோதுமை, மாவு மற்றும் இதர உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்தன. இது ஓர் அசாதாரணமான விஷயமாக இருந்ததால், மதீனா முழுவதும் இதைப் பற்றிப் பேசப்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: அப்துர் ரஹ்மான் தவழ்ந்தவாறு சொர்க்கத்தில் நுழைவார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் வரையும் இந்த விஷயம் எட்டியது. அப்போது அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் முன் ஆஜராகி, 'நான் இந்தப் பயணக்குழு முழுவதையும் அனைத்துப் பொருட்களோடு,

***ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:***

**"எந்த பொருளை இறைவழியில் செலவு செய்து முன்னே அனுப்பி வைத்து விட்டீர்களோ அதுவே உங்களது அசல் சொத்தாகும். எது பின்னால் எஞ்சி இருக்கின்றதோ அது வாரிசுகளின் சொத்தாகும்."**

(முஸ்லிம் கிதாபுஸ் ஸக்காத்...... ஹதீஸ் எண் *2383*)

எதுவரை என்றால், பொதிசேனத்தையும் கூட இறைவழியில் அர்ப்பணித்து விட்டேன். இதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!' என்று கூறினார்கள். அவர்கள் வ.்.பாத் ஆகும் தருணத்திலும் கூட 50 ஆயிரம் தீனாரையும் 1000 குதிரைகளையும் இறைவழியில் அர்ப்பணிப்பதற்கு உயில் எழுதினார்கள். இவை போக, பத்ர் போர் சஹாபாவில் அப்பொழுது வரை உயிரோடு இருந்தவர்களில் ஒவ்வொருவருக்கும் 400-400 தீனார் வழங்குவதற்கு உயில் எழுதினார்கள். அப்பொழுது வரை, பத்ர் போர் சஹாபிகள் 100 பேர் உயிரோடு இருந்தார்கள். அவர்கள் அனைவரும் அந்த உயிலிருந்து மகிழ்ச்சியுடன் பயன் பெற்றார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தமது பங்கைப் பெற்றார்கள் என்று கூறப்படுகிறது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 34 வயதில் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவர்கள் மிகப்பெரும் செல்வந்தராக இருந்தார்கள். முஸ்லிம்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்தபோது தண்ணீர்ப் பஞ்சம் அதிகம் இருந்தது. பேருஹா என்று ஒரு கிணற்றின் தண்ணீர் மட்டுமே மிகவும் உன்னதமானதாகவும் இனிமையானதாகவும் இருந்தது. ஆனால், அது ஒரு யூதருடைய சொத்தாக இருந்தது. அவர் தண்ணீரை விலைக்கு விற்று வந்தார். மறுபுறம் சஹாபாவின் பொருளாதார நிலை தண்ணீரை விலைக்கு வாங்கிக் குடிக்கும் அளவிற்கு இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்தக் கிணற்றை அதனுடைய சொந்தக்காரரான யூதரிடமிருந்து 20,000 திர்ஹமுக்கு விலைக்கு வாங்கி அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்காக ஆயத்தம் மேற்கொள்ளுமாறு ஆணை பிறபித்தபோது அளவுக்கதிகமான நிதி நெருக்கடி இருந்தது. போர்த் தளவாடங்களை ஏற்பாடு செய்வதில் மிகவும் சிரமம் ஏற்பட்டு வந்தது. அன்னார் கண்ணியத்திற்குரிய சஹாபாவிடம் பொருளுதவி செய்யுமாறு கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 10,000 போர் வீரர்களுக்கான செலவுகளை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்குத் தேவையான சாதாரணமான பொருள்கள் கூட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பணத்திலிருந்து வாங்கப்பட்டது. இது போக, 1000 ஒட்டகங்கள், 70 குதிரைகள் மற்றும் பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்காக 1000 தீனார் ரொக்கப் பணத்தையும் சமர்ப்பித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபா மட்டுமல்லாமல் சஹாபியாக்களும் பொருள் தியாகம் செய்வதில் எந்தக் குறையையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் தமது அன்பிற்குரிய மைந்தர்களை இஸ்லாத்தின் தலை நிமிர்வுக்காக சமர்ப்பித்த அதே வேளையில் தமக்கு மிகவும் பிடித்தமான பொருள்களை அதாவது, பொன், பொருள், நகைகள் ஆகியவற்றை எவ்வித தயக்கமுமின்றி இறைவழியில் செலவு செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய துணைவியாரான ஹஸ்ரத் ஸவ்தா (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீண்ட கையையுடைய பெண் எல்லாருக்கும் முதலாவதாக சொர்க்கத்தில் என்னை சந்திப்பார். அதாவது, எல்லாரையும் விட அதிகம் இறைவழியில் செலவு செய்யும் பெண் ஆவார்.

இறைவழியில் செலவு செய்வது, இறைவன் மற்றும் அவனுடைய தூதரை நெருங்குவதற்கும் அவர்களுடன் இருப்பதற்கும் காரணியாகத் திகழ்கிறது என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. உயிரை அர்ப்பணித்த சஹாபாவிடமும் அவர்களைப் பின்பற்றிய மக்களிடமும் இந்தத் தியாக உணர்வு நிலைபெற்றிருந்த காலம் வரை, முஸ்லிம்களில் முன்னேற்றங்களுக்கான காலகட்டம் தொடர்ந்து வந்தது. அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் கிடைத்து வந்தது.




ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்திலிருந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓர் இருள் நிறைந்த காலகட்டம் துவங்கி விட்டது. அதன் காரிருள் 1000 ஆண்டு காலகட்டத்தில் தனது உச்சத்தை எட்டி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கு ஏற்ப இஸ்லாம் வெறும் பெயரளவில் எஞ்சி விட்டது. தியாக உணர்வு மறைந்து போனது. உண்மையான ஈமான் உலகை விட்டு கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்தது. அப்போது இறைவனின் கருணை பொங்கி எழுந்தது. திருக்குர்ஆனின் 'முஹம்மது' (ஸல்) எனும் அதிகாரத்தில் எடுத்துரைக்கப்பட்ட இந்தத் தெளிவான முன்னறிவிப்புக்கு ஏற்ப,

وَاِنۡ تَتَوَلَّوۡا يَسۡتَبۡدِلۡ قَوۡمًا غَيۡرَكُمۡ ۙ ثُمَّ لَا يَكُوۡنُوۡۤا اَمۡثَالَكُمۡ

அதாவது, முஸ்லிம்களே! நீங்கள் இஸ்லாம் தழைக்க, அர்ப்பணிப்பதை விட்டு முகந்திருப்பி விட்டால், இறைவன் உங்களுக்குப் பதிலாக மற்றோரு சமுதாயத்தைக் கொண்டு வருவான். பிறகு, அவர்கள் உங்களைப் போன்று, தியாகம் செய்வதை விட்டு முகந்திருப்பக் கூடியவர்களாக இருக்க மாட்டார்கள். (அதிகாரம் முஹம்மத், வசனம் 39)

இந்தத் தெளிவான முன்னறிவிப்புக்கு ஏற்ப, யார் மூலமாக இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றி நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அந்த முஹம்மதிய மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை 14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், அல்லாஹ் உலகிற்கு அனுப்பினான். அன்னார் எப்படிப்பட்ட தருணத்தில் வருகை தந்தார்கள் என்றால், உலகத்தின் நாலா புறமும் வழிகேடு மற்றும் வழிதவறுதலுக்கான காலமாக அது இருந்தது. பொய்யின் ஆற்றல்கள் இஸ்லாத்தை பலவீனப்படுத்துவதற்கான முழு முயற்சியில் ஆழ்ந்திருந்தன. இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறிஸ்தவம் மற்றும் இதர மதங்களின் ஏமாற்றத்தில் சிக்கிக் கொள்ளத் துவங்கி இருந்தனர்.

இஸ்லாமோ முழு உலகையும் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியைக் கொண்டு ஒளி பெறச் செய்ய வந்தது. அந்த ஒளியை அணைக்கும் முயற்சியில் (அந்த மக்கள்) ஈடுபட்டிருந்தனர். இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில், காதியான் என்ற பிரசித்தி பெறாத ஊரிலிருந்து, ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியார், அன்னார் மீது எல்லாரையும் விட அதிகம் துரூத் மற்றும் சலாம் ஓதக்கூடிய சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் தோன்றினார்கள். அன்னாருக்கு அல்லாஹ் இந்த நற்செய்தியை வழங்கினான்:

நான் உமது பெயரை கண்ணியத்துடன் உலகத்தில் பரப்புவேன். எதுவரை என்றால், பேரரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள்.

மேலும், பணியை நிறைவு செய்வது தொடர்பாக அல்லாஹ் இந்த நற்செய்தியையும் வழங்கினான்:

உயிரை அர்ப்பணிக்கக்கூடிய மற்றும் நன்றியுணர் -வுள்ள ஒரு பரிசுத்தமான ஜமாஅத்தையும் நான் உமக்கு வழங்குவேன்.

பிறகு அல்லாஹ் இந்த நற்செய்தியையும் வழங்கினான்:

எவர்களுடைய உள்ளங்களில் நாம் எம்மிடமிருந்து இல்ஹாம் இறங்கச் செய்வோமோ அவர்கள் உமக்கு உதவி புரிவார்கள். (கவிதை வரிகள்)

இப்போது ஈமான் கொண்டவர் அருளுக்குரியவர் ஆவார். என்னைக் காண பெற்றவர் சஹாபாவோடு இணைந்து விட்டார்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் ஆன்மாவைக் கொண்ட, எல்லாருக்கும் முதலாவதாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த, ஹஸ்ரத் மௌலானா ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் பிற்காலத்தில் தமது நிகரற்ற உளத்தூய்மை மற்றும் தியாகத்தின் விளைவாக முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) ஆகத் திகழ்ந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதுகிறார்கள்: "நான் தங்களது வழியில் அர்ப்பணமாகிறேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல; தங்களுடையதே! மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! வழிகாட்டியே! என்னுடைய சொத்து, செல்வங்கள் அனைத்தும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகி விட்டால், எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறி விட்டது என்று நான் முழுவதுமாக உண்மையைக் கூறுகிறேன்." (நூல்: ∴பத்ஹே இஸ்லாம் (இஸ்லாத்தின் வெற்றி) உருது பக்கம்: 36)

அவர்களின் தொண்டுகளை நினைவு கூர்ந்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்தை உயரச் செய்வதற்காக தாம் சம்பாதித்த தூய்மையான பணத்தைக் கொண்டு அவர்கள் செய்து கொண்டிருக்கும் தொண்டுகளை, அப்படிப்பட்ட தொண்டுகளை என்னாலும் செய்ய முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்ற ஏக்கத்துடன் பார்க்கிறேன். அவர்கள் எனக்காக தமது செல்வத்தை என்ன, தமது உயிரையும் கண்ணியத்தையும் கூட அர்ப்பணிக்க தயங்குவதில்லை. (நூல்: ∴பத்ஹே இஸ்லாம் (இஸ்லாத்தின் வெற்றி) உருது பக்கம்: 35)

ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களைப் போன்று தியாகம் மற்றும் தொண்டு செய்வதற்கான உணர்வு கொண்டிருந்த எண்ணற்ற சான்றோர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும், தமது சொத்து செல்வங்கள் எல்லாம் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகி விட வேண்டும் என்றே ஆசை கொண்டார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாமே கூறுகிறார்கள்: என்னுடைய ஜமாஅத்தைச் சேர்ந்த மக்களில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் பேர் உண்மையான உள்ளத்தோடு என்மீது ஈமான் கொண்டுள்ளார்கள்; நற்செயலாற்றுகின்றார்கள் என்று என்னால் சத்தியம் செய்து கூற முடியும். என்னுடைய ஜமாஅத் எந்த அளவு நன்மை மற்றும் திறமைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதோ இதுவும் ஓர் அற்புதம் என்றே நான் பார்க்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தால் அர்ப்பணமாகிறார்கள். இன்று அவர்களிடம், உங்களின் செல்வங்கள் அனைத்தையும் விட்டுக் கொடுங்கள் என்று கூறப்பட்டால், அவர்கள் விட்டுக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். (நூல் சீரத்துல் மஹ்தி பாகம் 1 பக்கம் 145)

ஆக, அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இது போன்ற தியாகத்திற்கான எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. அவர்கள் சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குரலுக்கு செவிசாய்த்தவாறு எல்லா வகையான மார்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வின் வழியில் செலவு செய்த செல்வங்களில் எந்தச் செல்வத்திற்கு அதிக நற்கூலி கிடைக்கும் என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் உடல்நலமாக இருக்கும் நிலையில், செல்வத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, தேவைகளுக்கு பயந்து செல்வத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் செய்யும் செலவுதான் அதிக நற்கூலிக்குரியது என்று கூறினார்கள். மேலும் உயிர் தொண்டையை அடைந்த விட்ட பிறகு (உயிர் போகும் வேளையில்) செல்வத்தில் இருந்து இன்னாருக்கு இவ்வளவு கொடுங்கள்; இவ்வளவு தொகையை அவருக்குக் கொடுங்கள் என்று கூறாதீர்கள். அப்போது செல்வம் அவரவர்களுக்கு உரியதாகி விட்டது.**

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 31.03.2006 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...)

தமது உடல், பொருள், உயிர் ஆகியவற்றை ஹுஸூர் (அலை) அவர்களின் காலடியில் அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது: ஒரு தருணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு லூதியானாவில் முக்கியமான பிரசுரம் ஒன்றை அச்சடிப்பதற்காக 60 ரூபாய் தேவைபட்டது. அந்த நாள்களிலேயே அன்னாரின் ஒரு சிறந்த சஹாபி ஹஸ்ரத் முன்ஷீ ஸ.்.பர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் லூதியானா வருகை தந்திருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அவர்களை வரவழைத்து, ‘இப்போது இந்த முக்கியமான தேவை முன்னுள்ளது. உங்கள் ஜமாஅத்தால் இவ்வளவு பெரிய தொகையை ஏற்பாடு செய்ய முடியுமா?’ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ‘தலைவர் அவர்களே! இன்ஷா அல்லாஹ் செய்ய முடியும். நான் சென்று பணத்தைக் கொண்டு வருகிறேன்’ என்று பணிவுடன் கூறினார்கள். அவர்கள் உடனடியாக கபூர்த்தலாவுக்குச் சென்றார்கள். ஜமாஅத்தின் எந்த நபரிடமும் கூறாமல், தம் மனைவியின் ஒரு நகையை விற்று 60 ரூபாய் பெற்றார்கள். (அதை) ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டார்கள். (நூல்: அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 4 பக்கம் 41)

இது ஒரு நீண்ட அறிவிப்பாகும். ஹஸ்ரத் முன்ஷீ ஸ.்.பர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் தனியாகவே இந்தத் தொண்டை நிறைவேற்றியிருந்தார்கள். கபூர்தலாவின் ஜமாஅத் மக்களிடம் இணைந்து கொள்ளுமாறு கூறியிருக்கவில்லை. எனவே, இந்த நிகழ்வைப் பற்றி தெரிய வந்ததும், அதே ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்த முன்ஷீ அரூடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் ஆறு மாதங்கள் வரை, ஹஸ்ரத் முன்ஷீ ஸ.்.பர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் மீது, அவர்கள் தங்களைப் பொருள் தியாகம் செய்வதை விட்டும் இழப்பிற்குரியவர்களாக வைத்து விட்டார்களே என்று கோபித்துக் கொண்டு இருந்தார்கள். மாய்ந்து போகக் கூடிய இந்த மக்கள்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அம்மா ஜான் சய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் தொடர்பாக அறிவிப்பில் வருகிறது. அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக ஆயிரம் ரூபாய் வாக்குறுதியாக எழுதினார்கள். தில்லியிலிருந்த தமது ஒரு வீட்டை விற்று இந்தத் தொகையை செலுத்தி விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக அறிவித்தபோது ஹஸ்ரத் மியான் ஷாதீ கான் சாஹிப் ஸியால்கோட்டீ (ரலி) அவர்கள் கட்டில்கள் தவிர, தமது வீட்டிலிருந்த அனைத்துப் பொருள்களையும் 300 ரூபாய்க்கு விற்று முழு தொகையையும் ஹுஸூர் (அலை) அவர்கள் முன் சமர்ப்பித்து விட்டார்கள். அதைக் கண்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னிறைவை வெளிப்படுத்திய வண்ணம், ‘தாங்களோ ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்மாதிரியைக் காட்டியுள்ளீர்கள்’ என்று கூறினார்கள். இதைக் கேட்டவுடனேயே அவர்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்று கட்டில்களையும் விற்று முழு தொகையையும் சந்தாவில் கொடுத்து விட்டார்கள். (நூல் - தாரீகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யத்தின் வரலாறு) தொகுதி 2 பக்கம் 147)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: விறகு வியாபாரி மியான் ஷாதி கான் அவர்கள் சியால்கோட்டைச் சார்ந்தவர் ஆவார்கள். தற்போது அவர்கள் ஒரு பணிக்காக 150 ரூபாய் சந்தாவாக செலுத்தி இருந்தார்கள். இப்போது அவர்கள் அந்தப் பணிக்காக 200 ரூபாய் சந்தா அனுப்பி விட்டார்கள். அவர்களே எந்த அளவு தேவையுடைய நபராக இருக்கின்றார்கள் என்றால், அவர்களது வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களையும் நாம் பார்த்தாமேயானால், அனைத்து சொத்துக்களின் மதிப்புமே 50 ரூபாயை விட அதிகமாக இருக்காது.

அவர்கள் தமது கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார் -கள்: இவை பஞ்சத்தின் நாள்களாகும். உலக வியாபாரத்தில் அழிவு ஏற்படுவது தெளிவாகத் தெரிகிறது. எனவே, நாம் மார்க்க ரீதியான வியாபாரத்தை மேற்கொள்வதே சிறந்ததாகும். எனவே என்னிடம் இருந்த அனைத்தையும் அனுப்பி விட்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மையில் இவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்த பணியைச் செய்துள்ளார்கள். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3பக்கம் 315 - ஜூலை 1, 1900 அன்று வெளியானபிரசுரம்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் டாக்டர் கலீ.்.பா ரஷீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் தியாகங்கள் எந்த அளவு அதிகமாக இருந்தனவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்களுக்கு, ‘நீங்கள் இயக்கத்திற்காக எந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளீர்கள் என்றால், இனி நீங்கள் தியாகம் செய்ய வேண்டிய தேவையில்லை’ என்று எழுத்துப்பூர்வமான சான்றளித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தக் காலம் எனக்கு நினைவிருக்கிறது! அப்போது குர்தாஸ்பூரில் அன்னார் மீது வழக்கு நடந்து கொண்டிருந்தது. அதற்குப் பணம் தேவைபட்டது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் தம் தோழர்களிடம், ‘செலவுகள் அதிகரிக்கின்றன. லங்கர் கானா இரண்டு இடங்களில் செயல்படுகிறது. ஒன்று காதியானில் இன்னொன்று இங்கு குர்தாஸ்பூரில். இது போக, வழக்கிலும் செலவாகிறது. எனவே, தோழர்கள் பொருளுதவியின் பால் கவனம் செலுத்தவும்’ என்று அறிவித்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்களின் அறிவிப்பு டாக்டர் சாஹிப் அவர்களை அடைந்தபோது, தற்செயலாக அன்று அவர்களுக்கு 450 ரூபாய் சம்பளம் கிடைத்தது. அந்த சம்பளம் முழுவதையும் அப்பொழுதே ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அனுப்பி விட்டார்கள். தோழர் ஒருவர், நீங்கள் வீட்டுத் தேவைக்காக கொஞ்சம் பணத்தை வைத்திருக்கலாமே? என்று கேட்டார். அதற்கு அவர்கள், ‘இறைவனுடைய மஸீஹ் மார்க்கத்திற்காகத் தேவை இருக்கிறது என்று எழுதுகின்றார். பிறகு, வேறு யாருக்காக என்னால் வைக்க முடியும்?’ என்று கூறினார்கள். (டிசம்பர் 27, 1926 அன்று ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு - அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம் 403)

இதே போன்று ஹஸ்ரத் சாஹிப் ஸாதா பீர் மன்ஸூர் அஹ்மத் சாஹிப் அவர்கள் தொடர்பாக, வழக்கறிஞர் ஹஸ்ரத் மிர்ஸா அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் சாஹிப் ஸாதா பீர் மன்ஸூர் அஹ்மது சாஹிப் அவர்கள் யஸ்ஸர்னல் குர்ஆன் எனும் நூலைத் தோற்றுவித்தவர் ஆவார்கள். இந்த நூல் அதிகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தக் காலத்தில் அவர்களுக்கு நூற்றுக்கணக்கான ரூபாய் மாத வருமானமாக வந்தது. ஆனால், அவர்கள் மார்க்கத்திற்காகத் தியாகம் செய்யும் நிலை எப்படி இருந்ததென்றால், தமது மாதச் செலவுக்காக வெறும் 30 ரூபாய் மட்டுமே வைத்துக் கொள்வார்கள். மற்ற அனைத்தையும் திருக்குர்ஆன் வெளியீட்டிற்காகவும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். 1940-க்குப் பிறகு விலைவாசிகள் ஏறத் துவங்கியதும் மாதச் செலவுக்காக 40 ரூபாய் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஓராண்டில் 10,000 ரூபாய் மார்க்கத் தொண்டிற்காக வழங்கினார்கள். (அன்ஸாருல்லாஹ் மாத இதழ் -1969 ஆம் ஆண்டு ரப்வா வெளியீடு)

மிகவும் இக்கட்டான, சிரமமான சூழ்நிலையில், உள்ளத்தின் உணர்வுகளை அர்ப்பணித்தவாறு, இறை வழியில் தியாகம் செய்வது ஒன்றும் எளிய விஷயமல்ல. இதற்கான எண்ணற்ற முன்மாதிரிகள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஆங்காங்கே பொலிவுற்ற வண்ணம் தென்படுகின்றன.

பெஷாவரைச் சேர்ந்த ஹஸ்ரத் காஸீ முஹம்மத் யூஸுஃப் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒரு சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்தார்கள்: வஸீராபாத் உடைய ஷேக் குடும்பத்தின் ஓர் இளைஞன் மரணித்து விட்டான். அவனுடைய தந்தை கஃபன் துணிக்காக 200 ரூபாய் வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் லங்கர் கானாவின் செலவுகளுக்காக அறிவித்தார்கள். இவர்களுக்கும் கடிதம் சென்றது. அப்போது இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தொகையை அனுப்பி வைத்தபோது இவ்வாறு எழுதினார்கள்: என்னுடைய இளமைப் பருவ மகன் பிளேக் நோயினால் மரணித்து விட்டான். நான் அவனது கஃபனுக்காகவும் நல்லடக்கத்திற்காகவும் 200 ரூபாய் வைத்திருந்தேன். அதைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். மகனை அவனது ஆடையிலேயே நல்லடக்கம் செய்கிறேன். (ஸஹூர் அஹ்மத் இதழ், பக்கம் 70 - 71 - ஜனவரி 30, 1955 வெளியீடு)

ஹஸ்ரத் யாகூப் அலீ இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: எனக்கு அந்தக் காட்சி மறப்பதில்லை! என்னால் மறக்கவும் முடியாது! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆகி தற்போது சில மாதங்கள் தான் கழிந்திருக்கும்! ஒரு நாள் வெளியிலிருந்து என்னை யாரோ ஒருவர் குரல் கொடுத்து அழைத்தார். பணிப்பெண்ணோ அல்லது யாரோ ஒரு சிறுவனோ, 'கதவருகே ஒருவர் நிற்கின்றார் அவர் தங்களை அழைக்கின்றார்' என்று கூறினார்கள். நான் வெளியே வந்தேன். அப்போது மர்ஹூம் ஹஸ்ரத் முன்ஷீ முஹம்மத் அரூடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் உத்வேகத்தோடு முன்னால் வந்து, என்னுடன் கை குலுக்கினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தமது சட்டைப் பைலிருந்து 2,3 பவுண்ட் எடுத்துக் கொடுத்து இதை அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். இதைக் கூறியவாறு அவர்களுக்கு எந்த அளவு உருக்கம் ஏற்பட்டது எனில், அவர்கள் உரக்க அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் அழும் சப்தம் எந்த அளவு இருந்தது என்றால், ஓர் ஆட்டை அறுப்பது போன்று தெரிந்தது. அவர்கள் ஏன் அழுகிறார்கள் என்று நான் ஓரளவு வியப்படைந்திருந்தேன். ஆனால், நான் மௌனமாக நின்று கொண்டிருந்தேன். நான் அவர்கள் அமைதியாகட்டும்! பிறகு அவர்கள் அழுவதற்கான காரணத்தைக் கேட்கலாம் என்று காத்துக் கொண்டிருந்தேன்...

அவர்களுக்குச் சற்று நிதானம் ஏற்பட்டதும் நான் அவர்களிடம், 'தாங்கள் ஏன் அழுதீர்கள்?' என்று கேட்டேன். அவர்கள் கூறினார்கள்: நான் ஓர் ஏழை மனிதனாக இருந்தேன். ஆனால், எப்போது எனக்குக் கடிதம் கிடைத்தாலும் நான் காதியான் வருவதற்காகப் புறப்பட்டு விடுவேன். இயக்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக, சில பைசாக்கள் மீதமாகட்டுமே! என்று பயணத்தின் பெரும் பங்கை நான் நடந்தே கடந்து வந்தேன். ஆனால், அவ்வாறு இருந்தும் கூட 1 ரூபாயோ ஒன்றரை ரூபாயோ செலவாகிவிடும். இங்கு வந்து நான் செல்வந்தர்களை, அவர்கள் இயக்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக அதிகம் ரூபாய்களை செலவு செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது பிறகு, என்னிடமும் ரூபாய் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒவ்வொரு நாள் காலையிலும் இரண்டு மலக்குகள் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர், அல்லாஹ்வே! தியாகம் செய்யக் கூடிய கொடையாளிக்கு மேலும் வழங்குவாயாக. மேலும் அவரது அடிச்சுவட்டில் செல்லக்கூடிய மக்களை உருவாக்குவாயாக என்று கூறுவார். மற்றொருவர், அல்லாஹ்வே! தியாகத்திலிருந்து தவிர்ந்திருக்கக்கூடிய கருமியை அழித்து விடுவாயாக. அவரது செல்வத்தை வீணாக்கி விடுவாயாக என்று கூறுவார்.

(புகாரி கிதாபுஸ் ஸக்காத்)

வெள்ளியால் ஆன அன்பளிப்பைக் கொண்டு வருவதற்குப் பதிலாகத் தங்கத்தால் ஆன அன்பளிப்பை முன்வைக்கலாமே என்ற எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றும். கடைசியில், எனது சம்பளம் சற்று அதிகரித்து விட்டது. (அப்போது அவர்களின் சம்பளம் 20-25 ரூபாயை எட்டியிருந்தது என்று நினைக்கிறேன்.)

அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஒவ்வொரு மாதமும் சிறிது தொகையை ஒன்றுதிரட்ட ஆரம்பித்து விட்டேன். நான் என்னுடைய உள்ளத்தில், இந்தத் தொகை நான் விரும்பும் அளவை அடைந்ததும், நான் இதை தங்க நாணயமாக மாற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன் சமர்ப்பித்து விடலாம் என்று நிய்யத் வைத்திருந்தேன்...... என்னிடம் சில தங்க நாணயங்கள் சேர்ந்த பிறகு........ அவர்கள் இதுவரை கூறியதும் அவர்களுக்கு உருக்கம் ஏற்பட்டு விட்டது. அவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். கடைசியில் அழுதவாறு அவர்கள் இந்த வாக்கியத்தை இவ்வாறு முழுமைபடுத்தினார்கள்: என்னிடம் சில தங்க நாணயங்கள் சேர்ந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

இது கலப்பற்றத் தன்மைக்கான எத்தகைய மகத்துவமிக்க முன்மாதிரியாக இருக்கிறது! ஒரு நபர் சந்தாக்களும் கொடுக்கிறார். தியாகங்களும் செய்கிறார். மாதத்திற்கு ஒருமுறை அல்ல; இருமுறை அல்ல. மாறாக, மூன்று மூன்று முறை ஜுமுஆ தொழுவதற்காக காதியான் வந்து விடுகிறார். இயக்கத்தின் இதழ்களையும் நூல்களையும் வாங்குகிறார். ஒரு சாதாரணமான சம்பளம் தான் இருந்தது. இன்றோ அதை விட அதிகமாக சம்பளம் வாங்குபவர்கள், அந்தத் தியாகத்தின் பத்தில் ஒரு பங்கைக் கூட, ஏன்! இருபதில் ஒரு பங்கைக் கூட தியாகம் செய்வதில்லை. செல்வந்தர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன் தங்கத்தை சமர்ப்பிக்கும்போது நான் அவர்களை விட ஏன் பின்தங்கியிருக்க வேண்டும் என்ற சிந்தனை அவருடைய மனதில் எழுகிறது. அவர் மிகவும் குறைவான ஒரு சம்பளத்திலிருந்து மாதாமாதம் சில தொகைளை ஒன்று திரட்டுகின்றார். ஒரு நீண்ட காலம் வரை ஒன்று திரட்டி வருகிறார்.

அந்த இடைப்பட்ட காலத்தில் அவர் தமது வீட்டில் என்னென்ன நெருக்கடிகளை சகித்துக் கொண்டாரோ! என்னென்ன கஷ்டங்கள் அவருக்கு ஏற்பட்டனவோ தெரியவில்லை. அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன் பொற்காசுகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே அவற்றை மகிழ்ச்சியுடன் சமாளித்திருப்பார். ஆனால், அவருடைய ஆசை நிறைவேறும் நேரம் வரும்போது, அல்லாஹ்வின் நுட்பமான செயல் அவர் பார்க்க விரும்பிய அந்த வடிவத்தில் மகிழ்ச்சியைப் பெறுவதை விட்டும் அவரை இழப்பிற்குரியவராக ஆக்கி விடுகிறது. (நூல்: அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 4 பக்கம் 74 -76)

> ஹுஸூர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்:
>
> பொருள் தியாகம் செய்வது சாதாரண விஷயம் ஒன்றும் அல்ல. அதற்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளது. ஈமானை வலுப்பெறச் செய்வதற்கும், அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாவதற்கும் இது மிகவும் அவசியமான விஷயமாகும்.
>
> (ஜுமுஆ குத்பா 06.01.2006)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இவ்வாறே நமது அன்பிற்குரிய நண்பர் அம்ருஹாவைச் சேர்ந்த மௌலவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் அவர்கள் இந்த இயக்கத்திற்கு உதவி செய்வதற்காக உன்னத உன்னதமான நூல்களை எழுதவதில் மூழ்கியிருக்கிறார்கள். சாஹிப்ஸாதா பீர் சிராஜுல் ஹக் சாஹிப் அவர்களோ ஆயிரக்கணக்கான சீடர்களுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு இந்த இடத்தின் ஏழ்மை வாழ்வை ஏற்றுக் கொண்டார்கள்.

மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரீ அவர்கள், மௌலவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமீ அவர்கள், மௌலவி முபாரக் அலீ சாஹிப் சியால்கோட்டீ அவர்கள், காஸீ ஸியாவுத்தீன் சாஹிப் காஸீ கோட்டீ அவர்கள், குருதாஸ்பூர் மாவட்டத்தின் பட்டாலாவைச் சேர்ந்த முன்ஷீ சவுத்ரீ நபீ பக்ஷ் சாஹிப் அவர்கள் மற்றும் முன்ஷீ ஜலாலுத்தீன் சாஹிப் அவர்கள் முதலிய அன்பர்கள் தத்தமது சக்திக்கு ஏற்ப தொண்டாற்றுவதில் ஈடுபட்டுள்ளார்கள். நான் எனது ஜமாஅத்தின் அன்பு மற்றும் கலப்பற்றத் தன்மையைக் கண்டு வியப்படைகிறேன்! அவர்களில் மிகவும் குறைவான வருமானத்தை உடைய மியான் ஜமாலுத்தீன், கைருத்தீன் மற்றும் இமாமுத்தீன் கஷ்மீரி போன்றோர் எனது கிராமத்துக்கு அருகில் வசிக்கக் கூடியவர்கள் ஆவார்கள். அந்த மூன்று ஏழை சகோதரர்களும் கூட - அவர்கள் மூன்று அல்லது நான்கு அனாக்களைத் தினக்கூலி வேலை செய்து சம்பாதிக்கின்றனர் - அவர்கள் மாதந்திர சந்தா செலுத்துவதில் மும்முரமாகப் பங்கெடுக்கின்றனர். அவர்களது நண்பரான கிராமப்பதிவாளர் மியான் அப்துல் அஸீஸ் அவர்களின் கலப்பற்றத்தன்மையைக் கண்டும் எனக்கு வியப்பு ஏற்படுகிறது. அவர்கள் வாழ்வதாரம் குறைவாக இருந்தும் கூட ஒரு நாள், 'இறைவழியில் செலவாக வேண்டும் என்று விரும்புகிறேன்' என கூறி100 ரூபாய் கொடுத்துச் சென்றார்கள். இந்த ஏழை மனிதர் அந்த 100 ரூபாயைப் பல வருடங்களாக ஒன்று சேர்த்திருக்கலாம். ஆனால் இறைவன் மீது கொண்டிருந்த உணர்வானது இறை திருப்தியின் உணர்வைத் தூண்டி விட்டது. (ஸமீமா அன்ஜாமே ஆத்தம் - ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 313, 314 அடிக்குறிப்பு)

மார்க்கத்தின் வழியில் பொருள் தியாகம் செய்வதற்கான ஒரு மகத்துவமிக்க மற்றும் கம்பீரமான உதாரணம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் சவுத்ரீ முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்களுடையதாகும். இலண்டன் மிஷன் ஹவுஸில் 1960-களில், பிரிட்டனின் தலைமையகத்தில் இருக்கும் இரண்டு கட்டடங்களையும் (அவை மிகவும் பழமையாகி விட்டிருந்தன.) இடித்து விட்டு ஒரு பெரிய வளாகத்தைக் கட்ட வேண்டும். அதில் ஒரு பெரிய ஹால், அலுவலகங்கள், இரண்டு பெரிய தங்கும் அறைகள் மற்றும் ஒரு சிறிய தங்கும் ஃபிளாட் இருக்க வேண்டும் என்று

ஆலோசனை வழங்கப்பட்டது. அப்போது இந்தக் கட்டுமானப் பணிக்காகத் தேவைப்பட்ட தொகையான ஒரு இலட்சம் பவுண்ட் ஜமாஅத்திடம் இல்லை. நன்கு சிந்தித்தும், முயற்சியும் செய்த பிறகும் எந்த சூழலும் உருவாகாததால், ஹஸ்ரத் சவுத்ரீ சாஹிப் (ரலி) அவர்களிடம், தங்களால் இந்தத் தொகையைத் தர முடியுமா? அது பிறகு தங்களுக்குத் தவணை முறையில் திருப்பி செலுத்தப்படும்! என்று கூறப்பட்டது. அவர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இந்த நோக்கத்திற்காக இவ்வாறு ஓர் ஒப்பந்தமும் போடப்பட்டது: ஹஸ்ரத் சவுத்ரீ சாஹிப் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்கு ஒரு இலட்சம் பவுண்ட் வழங்குவார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தத் தொகையைத் திருப்பி செலுத்துவது ஜமாஅத்தின் பொறுப்பாகும்.

ஒரு நாள் மாலை இந்த எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் சவுத்ரீ சாஹிப் (ரலி) அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள், 'நான் நன்றாகப் படித்துப் பார்த்து விட்டு கையொப்பமிட்டு நாளை கொடுத்துவிடுவேன்' என்று கூறினார்கள். அடுத்த நாள் காலையில் சவுத்ரீ சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இது தொடர்பாக யோசித்தேன். நேர்மையுடன் இதில் ஆழ்ந்து கவனம் செலுத்தினேன். அப்போது எனது உள்ளம் என்னிடம், ஸ∴பருல்லாஹ் கான்! இன்று நீ அஹ்மதிய்யத்தின் காரணமாகத்தான் இந்த நிலையில் இருக்கின்றாய்! நீ பெற்றதெல்லாம் இந்த ஜமாஅத்தின் அருளினாலேயே ஆகும். எனவே, இப்போது நீ அதே பேருதவி புரிந்த ஜமாஅத்திற்கு, திருப்பித் தர வேண்டும் என்ற கடனாக ஒரு தொகையைக் கொடுக்க விரும்புகின்றாயா? என்று கேட்டது. எனது உள்ளம் என்னை மிகவும் குற்றஞ்சாட்டியது. எனது எண்ணத்தினால் எனக்கு மிகவும் வெட்கம் ஏற்பட்டது. அதிகமாக இஸ்தி∴க்∴பார் செய்தேன். அந்த நொடியே என்னிடம் கேட்கப்பட்ட தொகையைக் கடனாக அல்ல. மாறாக, ஒரு பணிவுள்ள நன்கொடையாக ஜமாஅத்திற்கு முன் அர்ப்பணிக்க வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன். இதைக் கூறியவாறு அவர்கள் ஒப்பந்தத்தைக் கிழித்து விட்டார்கள். ஒரு இலட்சம் பவுண்ட் தொகைக்கான காசோலையை அப்போது ஜமாஅத்திடம் கொடுத்து விட்டார்கள். அத்துடன், 'நான் செலுத்திய இந்தத் தொகையைப் பற்றி என்னுடைய வாழ்நாளில் ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களைத் தவிர வேறு யாரிடமும் ஒருபோதும் கூற வேண்டாம்' என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

தியாகம், பணிவு மற்றும் கலப்பற்ற தன்மைக்கான என்ன ஒரு மகத்துவமிக்க முன்மாதிரி!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாவிடம் பொருள் தியாகங்களுக்கான உணர்வு எந்த அளவு உறுதி பெற்று விட்டிருந்தது என்றால், அதற்கான புதுப்புது கோணங்களை மேற்கொண்டு வந்தார்கள். ஒரு சிறிய உதாரணத்தை முன்வைக்கிறேன். அதில் எல்லையற்ற தியாக உணர்வு பொலிவுறத் தெரிகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சஹாபியான சாயீ(ன்) தீவான் ஷா சாஹிப் அவர்கள் தாம் மீண்டும் மீண்டும் காதியான் வருவதற்கான காரணத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: நான் ஏழையாக இருப்பதால் என்னால் சந்தா செலுத்த முடியாது. எனது தலையிலிருந்து சந்தாவின் சுமை இறங்கி விட வேண்டும் என்பதற்காக விருந்தினர் இல்லத்தின் கயிற்றுக் கட்டில்களைத் தயாரித்துக் கொடுப்பதற்காகக் காதியான் செல்கிறேன். (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 13 பக்கம் 9)

ஹஸ்ரத் பாபூ ∴பக்கீர் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் அமிர்தசரஸில் இருந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் சார்பாக சந்தா வசூலிப்பவர்கள் வந்து விட்டார்கள். அவர்களிடம் ரொக்கப் பணம் இருக்கவில்லை. மாவு சேமித்து வைக்கும் பாத்திரத்தில் அரை கிலோவுக்குச் சற்று குறைவான அளவு மாவு இருந்தது. அவர்கள் அதையே கொடுத்து விட்டார்கள். முழு இரவையும் அவர்களும் அவர்களின் மனைவி மக்களும் பட்டினியாகக் கழித்தார்கள்.

பொருள் தியாகத்தின் களத்தில் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) எழுதிய அத்தியாயங்களுக்கான முன்மாதிரி, மார்க்கங்களின் வரலாற்றில் கிடைப்பதில்லை. ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய வண்ணம் கண்ணியத்திற்குரிய சஹாபா உயிரையும் பொருளையும் தியாகம் செய்தார்கள். அவற்றை அல்லாஹ் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், திருக்குர்ஆனில் ரலியல்லாஹு அன்ஹும் வரலூ அன்ஹு எனும் தனிச்சிறப்பு மிக்க பட்டத்தையும் வழங்கியுள்ளான். அதாவது, அல்லாஹ் அவர்களைப் பற்றித் திருப்தி கொண்டான். அவர்கள் அல்லாஹ்வைப் பற்றித் திருப்தி கொண்டார்கள்.

என்னே மேன்மை அந்தத் தூய மக்களுக்கு! அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

اَصْحَابِی كَالنُّجُومِ بِاَيِّهِمُ اقْتَدَيْتُمُ اهْتَدَيْتُمُ

அதாவது, என்னுடைய சஹாபா நட்சத்திரங்களைப் போன்றவர்கள். நீங்கள் அவர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களைப் பார்த்து கூறுகிறான்:

اِنَّ اللّٰهَ اشْتَرٰى مِنَ الْمُؤْمِنِيْنَ اَنْفُسَهُمْ وَ اَمْوَالَهُمْ بِاَنَّ لَهُمُ الْجَنَّةَ ؕ

"நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு சுவர்க்கம் அளிப்பதற்கு ஈடாக அல்லாஹ் அவர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும் அவர்களின் செல்வங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டான்." (அதிகாரம் தவ்பா 9:111)

உண்மையான வாக்குறுதிகளை அளிக்கும் இறைவன் தரப்பிலிருந்து, எந்த மனிதருக்கு தன் வாழ்நாளிலேயே சுவர்க்கத்திற்கான நற்செய்தி கிடைத்து விட்டதோ அவர் நிச்சயமாக தனது குறிக்கோளை அடைந்து விட்டார்.

இதே வசனத்தின் கடைசி பகுதியில் அல்லாஹ் பொருள் தியாகம் செய்யக்கூடிய போராளிகளுக்கு எந்த அளவு உறுதியான சொற்களில் நற்செய்தி வழங்கியுள்ளான்! அதாவது, தமது வியர்வை மற்றும் ரத்தத்தால் சம்பாதித்த

நேர்மையான வாழ்வாதாரத்தை நான் திருப்தி அடைவதற்காக அர்ப்பணிக்கும் மக்களே! நான் உங்களுக்குக் கூறுகிறேன்:

فَاسْتَبْشِرُوا بِبَيْعِكُمُ الَّذِي بَايَعْتُمْ بِهِ ۚ وَذَٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ

அதாவது, நீங்கள் அவனுடன் செய்த உங்கள் வணிகம் குறித்து மகிழ்ச்சி அடையுங்கள். மேலும் இதுவே மாபெரும் வெற்றியாகும். (அதிகாரம் தவ்பா 9:111)

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய நமது இறைவன் நம் மீது எந்த அளவு பேரருள் புரிந்திருக்கிறான்!

அவன் நம்மைப் படைத்தான். அவன் நமக்கு வாழ்வளித்தான். அவனே பொருள் சம்பாதிப்பதற்கான ஆற்றலையும் நல்வாய்ப்பையும் வழங்கினான். அவனது அருள் மற்றும் பேராதரவினால் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தின் ஒரு பகுதி அவனுக்காகவே அர்ப்பணிக்கப் -படுகிறது. அப்போது ஒவ்வோர் அணுவையும் வழங்கும் அந்த இறைவன் எந்த அளவு மகிழ்ச்சி அடைகிறான் என்றால், சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குகின்றான். ஐயத்திற்கிடமின்றி, நம்பிக்கை கொண்ட அடியார் ஒருவருக்கு மாபெரும் வெற்றி என்று கூறும் அளவிற்கு இதை விட அதிகம் வேறெந்த அருட்கொடை இருக்கிறது?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் என்னே அருமையாகக் கூறுகிறார்கள்: இந்தப் பொன் பொருள்கள் அனைத்தும் உலகத்திலேயே இருந்து விடும். எழுப்பப்படும் நாளில் பலனளிக்கக்கூடிய அந்தப் பொன்னை உருவாக்குங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் இரண்டு விஷயங்களை நேசிக்க முடியாது என்பது வெளிப்படை. செல்வத்தையும் நேசித்து இறைவனையும் நேசிப்பது உங்களுக்கு சாத்தியமில்லை. ஒன்றை மட்டுமே உங்களால் நேசிக்க முடியும். எனவே, இறைவனை நேசிக்கக்கூடிய அந்த மனிதர் நற்பேறு பெற்றவர் ஆவார். உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து அவனது வழியில் பொருள் செலவு செய்தால், அவருடைய செல்வத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் பரக்கத் வழங்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை மாறாக, இறைவனுடைய நாட்டத்தால் வருகிறது. (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 749)

மேலும் கூறுகிறார்கள்: தம்மை பைஅத் செய்தவர்களில் ஒருவராகக் கருதும் ஒவ்வொருவரும் தற்போது தமது செல்வத்தைக் கொண்டும் இந்த அமைப்பிற்குத் தொண்டு செய்ய வேண்டிய நேரமாகும்.......... பைஅத் செய்த ஒவ்வொருவரும் தமது வசதிகேற்ப உதவி செய்ய வேண்டும். இவ்வாறு இறைவனும் அவர்களுக்கு உதவி செய்வான். தாமதமின்றி மாதாமாதம் அவர்களின் உதவி வந்தடைந்து கொண்டே இருந்தால், அது சிறிய உதவியானாலும் சரி! அது நீண்ட காலமாக மறந்து போன பிறகு, ஏதாவது ஒரு நேரத்தில் தனக்கு நினைவு வந்ததன் காரணமாகவே செய்யப்படும் அந்த உதவியைக் காட்டிலும் சிறந்தது. ஒவ்வொரு நபரின் உண்மையும் அவரது தொண்டின் மூலமாகவே கண்டறியப்படுகிறது. அன்பர்களே! இது மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தின் நோக்கங்களுக்காகவும் தொண்டு செய்ய வேண்டிய நேரமாகும். இந்த நேரத்தைப் பொன்னானதாகக் கருதுங்கள். பிறகு ஒருபோதும் இது உங்களுக்குக் கிடைக்காது. (கிஷ்தி நூஹ் - நூஹ் நபியின் கப்பல் - ரூஹானீ கஸாயின் தொகுதி 19 (உருது) பக்கம் 83)

மேலும் கூறுகிறார்கள்: செல்வத்தை நேசிக்காதீர்கள். ஏனென்றால், ஒரு காலம் வரும்! நீங்கள் செல்வத்தை விடவில்லை என்றால், அது உங்களை விட்டுவிடும். (மஜ்மூஆ இஷ்திஹாராத் - தொகுதி 3, பக்கம் 318)

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமாகும். இதில் ஒரு ஜிஹாத், பொருள் தியாகத்துக்கான ஜிஹாதும் ஆகும். ஏனெனில், இது அல்லாமல், இஸ்லாத்தைத் தற்காப்பதற்காக நூல்கள் அச்சாகவும் முடியாது. திருக்குர்ஆன் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் முடியாது. இந்த மொழியாக்கங்கள் உலகின் மூலை முடுக்குகள் வரை எட்டவும் முடியாது. மிஷன் ஹவுஸ்கள் (பிரச்சார நிலையங்கள்) திறக்கப்படவும் முடியாது. முரப்பிமார்களும் முபல்லி∴க்மார்களும் தயாராக -வும் முடியாது. முரப்பிமார்களும் முபல்லி∴க்மார்களும் ஜமாஅத்துகளில் அனுப்பி வைக்கப்படவும் முடியாது. பள்ளிவாசல்கள் கட்டப்படவும் முடியாது. பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் மூலமாக ஏழை மக்கள் வரை கல்வி வசதிகள் எட்ட வைக்கப்படவும் முடியாது. மற்றும் மருத்துவமனைகள் மூலமாக, துயரத்திற்குள்ளான மனிதகுலத்திற்குத் தொண்டு செய்யவும் முடியாது. எனவே, உலகின் அனைத்து மூலைகள் வரை, ஒவ்வொரு மூலையில் உள்ள மனிதர் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடையாத வரை ஏழைகளின் தேவைகள் முழுமையான முறையில் நிறைவேற்றப்படாத அந்த நேரம் வரை, இந்தப் பொருள் போர் தொடர்ந்து கொண்டே இருக்கும். தத்தமது வசதி வாய்ப்புக்கேற்ப ஒவ்வோர் அஹ்மதியும் இதில் பங்கெடுப்பது அவசியமாகும். (மார்ச் 31, 2006 அன்று நிகழ்த்தப்பட்ட ஜும்ஆ பேருரை அல் ∴பஸ்ல் பத்திரிக்கை, லண்டன் வெளியீடு - ஏப்ரல் 21, 2006 பக்கம் 6)

உங்களிடம் செல்வம் இருக்கிறது என்றால், அதிலிருந்து ஸகாத்தும் சதக்காவும் செலுத்துங்கள். உங்களுக்கு மிஸ்கீன்கள் குறித்த கவலை இருக்கட்டும். (வரக்கூடிய) நாள்கள் குறித்த கவலை இருக்க வேண்டாம்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَأَنْفِقُوا خَيْرًا لِأَنْفُسِكُمْ ۗ وَمَنْ يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ

(அவனது வழியில்) செலவு செய்யுங்கள். இது உங்களுக்கே மிக நல்லதாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்படுபவர்களே, வெற்றி பெறுபவர்களாவர். (அதிகாரம் அத்தகாபுன் 64:17)

இந்தத் திருவசனத்தில், நாம் நமது நன்மை மற்றும் நலம் விரும்புதலுக்காக செலவு செய்வதன் பால் நமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இறைவனோ தேவையற்றவன். அவனுக்குப் பொன் பொருளின் எந்தத் தேவையும் இல்லை.

அல்லாஹ் நமக்கு இறைவழியில் செலவு செய்யும் களத்தில் அதிகதிகமாக செலவு செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அதன் விளைவாக நமக்குப் பொருள் தியாகத்தின் அருள்கள் மற்றும் பரக்கத்துகளை வழங்குவானாக! ஆமீன்!

# பாவமன்னிப்பிற்கான ஏழு நிபந்தனைகள்

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

1 மனிதன் தனது முந்தைய பாவங்களுக்காக வெட்க உணர்வை ஏற்படுத்த வேண்டும். அது எவ்வாறு என்றால், அவன் முந்தைய பாவங்களை நினைவு கூர்ந்து அவற்றை முன்னால் நிறுத்தி வியர்த்து விறுவிறுக்கும் அளவுக்கு வெட்கப்பட வேண்டும்.

2 **இரண்டாவது நிபந்தனை**, முந்தைய கடமைகள் எந்த அளவுக்கு எஞ்சியிருக்கின்றனவோ அவற்றில் அவர் நிறைவேற்ற முடிந்தவற்றை நிறைவேற்ற வேண்டும். ஆயினும் நிறைவேற்ற முடியாதவை கட்டாயத்திற்கு உட்பட்டவையாகும். உதாரணமாக, தொழுகைகளை தொழாதவராக இருந்தார் என்றால், அவற்றை நிறைவேற்ற முடியாது. அவற்றை நிறைவேற்றும்படி ஷரீஅத்தின் கட்டளையும் இல்லை; அவற்றை நிறைவேற்றவும் முடியாது. ஆயினும், ஏதாவது தொழுகைக்கான நேரத்தில் அவருக்கு தவ்பா செய்யும் எண்ணம் தோன்றினால், அவர் அந்தத் தொழுகையைத் தொழ வேண்டும் அல்லது தகுதி பெற்றவராக இருந்தும் ஹஜ் செய்யவில்லை என்றால் அவர் இப்போது ஹஜ் செய்யட்டும். ஸக்காத் கொடுக்கவில்லை என்றால், ஆயுள் முழுக்க உள்ள காலம் போகட்டும்; அந்த ஆண்டு கொடுக்கட்டும். ஆக, மனிதன் முந்தைய பாவங்களுக்காக வெட்கத்தை உருவாக்க வேண்டும். இரண்டாவது, முந்தைய கடமைகளை நிறைவேற்ற முடியும் என்றால் நிறைவேற்றட்டும்.

3 **மூன்றாவது நிபந்தனை**, முந்தைய பாவங்களை நீக்கட்டும். நீக்குதல் என்றால் ஒருவரைக் கொலை செய்தார் என்றால் அவரை உயிரூட்டட்டும் அல்லது விபச்சாரம் செய்தார் என்றால் திருப்பிக் கொடுக்கட்டும் என்பது எனது கருத்து அல்ல. மாறாக, எந்தப் பாவங்களை நீக்க முடியுமோ அதை நீக்கட்டும். உதாரணமாக, ஒருவருடைய எருமை மாட்டை திருடி தன் வீட்டில் கட்டிப் போட்டிருக்கிறார் என்றால் அவருக்கு திருப்பிக் கொடுக்கட்டும். தன்னிடம் வைக்காதிருக்கட்டும்.

4 **நான்காவது நிபந்தனை**, ஒருவருக்கு துன்பமிழைத்திருந்தால் அதை நீக்குவதுடன், அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இது ஒரு நுட்பமான விஷயமாகும். அடியார்களின் மீது செய்த பாவங்களுக்கு அந்த அடியார்களிடமே மன்னிப்புக் கேட்க வேண்டும் என இறைவன் நிபந்தனை விதித்துள்ளான். அடியார் மன்னித்து விட்டால் பிறகு அல்லாஹ் அந்த விஷயத்தில் பிடிக்க மாட்டான். எவர்களுக்கு துக்கமிழைக்கப்பட்டுள்ளதோ அவர்களிடமிருந்து திருப்தியைப் பெற முடியும் என்றால் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவன் மிகவும் ‘சத்தார்’ (திரையிட்டு மறைப்பவன்) ஆவான்.

توبه

அவன் மனிதனின் மாபெரும் பாவங்களையும் திரையிட்டு வைத்திருக்கிறான். எனவே மனிதன் தன் மீது திரையிட்டு மறைத்தலை தானும் செய்ய வேண்டும். மேலும் இறைவன் மறைத்து வைத்திருக்கின்ற பாவங்களை மனிதன், தானே வெளிப்படுத்திக் கொண்டு திரியக் கூடாது. உதாரணமாக, ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் நான் உங்களிடமிருந்து திருடினேன் என தாமாகவே அவரிடம் சென்று கூறக் கூடாது. அவ்வாறு கூறுவதே பாவமாகும். இந்த வழிமுறைப்படி (பாவத்தை) நீக்கக் கூடாது. மாறாக, ஒருவர் இன்னொருவரை அடித்து விட்டால் அதை நீக்க வேண்டும்; தாமே சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். எந்த பாவங்களை அல்லாஹ்வே மறைத்திருக்கிறானோ அவற்றை தாமாகவே வெளிப்படுத்தக் கூடாது.

5 **ஐந்தாவது நிபந்தனை**, எவருக்கு நஷ்டமிழைத்தீர்களோ அவருக்கு முடிந்த அளவுக்கு நன்மை செய்ய வேண்டும். எதுவும் செய்ய முடியாதென்றால் துஆவாவது செய்ய வேண்டும். இறைநேசர்களும் இந்த வழிமுறையை எழுதியிருக்கிறார்கள். ஒருவருடைய செல்வத்தை தகாத முறையில் விழுங்கியிருந்தால் அதைத் திரும்ப செலுத்துவதற்கு ஆற்றல் இல்லை என்றால் இறைவனிடம், இறைவா! அவருடைய செல்வத்தை திருப்பிக் கொடுப்பதற்கான ஆற்றல் எனக்கு இல்லை. எனவே நீ உன்னிடமிருந்து அவருக்கு அதை வழங்கி விடுவாயாக என துஆ செய்ய வேண்டும்.

6 **ஆறாவது**, அவர் தன் உள்ளத்தில் இனி பாவம் செய்யாதிருப்பதற்கான உறுதியான உடன்படிக்கை எடுக்க வேண்டும். இனி எந்தப் பாவமும் செய்ய மாட்டேன் என உறுதியான உடன்படிக்கை எடுக்க வேண்டும். அதற்குப் பிறகும் கட்டாயத்திற்குள்ளாகி பாவம் செய்கிறார் என்றால் அது வேறு விஷயம். ஆனால் பாவமன்னிப்புத் தேடும்போது இந்த உறுதிமொழி எடுப்பது அவசியமானதாகும். இரவில் பாவம் செய்து விட்டு பகலில் இனி பாவம் செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வது என்பது எனது கருத்து அல்ல. மாறாக, மனிதன் உறுதிமொழி எடுக்கும்போது அவனுடைய நிய்யத் (எண்ணம்) தூயதாகவும் கலப்பற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் அவர் தன் சார்பாக அதிலிருந்து தப்பிப்பதற்கு தன்னால் இயன்ற அளவுக்கு முழு முயற்சி செய்ய வேண்டும்.

7 **ஏழாவது விஷயம்** என்னவென்றால், மனிதன் மனதை நன்மையின் பக்கம் ஆர்வமூட்டத் துவங்கி விட வேண்டும். மேலும் தனது மனதில் நல்ல விஷயங்களை நுழைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் மனதை நன்மையான வேலைகளுக்காக ஆயத்தம் செய்ய வேண்டும்.

**(நூல்: இறைஞானம் பக்கம் 58-60)**

5

# ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து எஸ்ஸென்ஸ் ஆ.்ப் இஸ்லாம்

தொகுதி 1

# தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்

அதிகாரம் 3

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

## அல்லாஹ்வின் பண்புகளின் அறிவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது

قُلْ رَّبِّ زِدْنِیْ عِلْمًا 118

இதன் பொருள்: என் இறைவனே! உனது மகத்துவம், உனது வழிகள் மற்றும் உனது பண்புகள் பற்றிய முழுமையான அறிவை எனக்கு வழங்குவாயாக!.

வேறு இடத்தில் கூறப்பட்டுள்ளது:


وَبِذٰلِكَ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ 119

இந்த இரு வசனங்களையும் ஒன்றாகப் படிக்கும்போது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறைவனைப் பற்றிய அறிவில் மிக உயர்ந்தவர் என்பதனால் முஸ்லிம்களில் முதன்மை -யானவராக விளங்கினார்கள். அதனால் அவர்களின் இஸ்லாம் அனைவரின் இஸ்லாத்தை விட உயர்ந்தது. அவர்கள் முஸ்லிம்களில் முதன்மையானவர். வேறு ஒரு வசனமும் அவர்களின் அறிவின் விரிவை குறிப்பிடுகிறது:

وَعَلَّمَكَ مَا لَمْ تَكُنْ تَعْلَمُ ۚ وَكَانَ فَضْلُ اللّٰهِ عَلَيْكَ عَظِيْمًا 120

இதன் பொருள்: அல்லாஹ் உமக்கு, நீர் சுயமாக கற்றுக் கொள்ள முடியாததை கற்றுத் தந்தான். தனது فضل (கருணை) மூலம் உம்மை மற்ற அனைவர் மீதும் மேன்மைப்படுத்தினான். அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறைவனைப் பற்றிய அறிவிலும் புரிதலிலும் அனைவரையும் கடந்து சென்றார்கள். இவ்வாறு அல்லாஹ் அவர்களுக்கு அந்த அறிவின் நறுமணத்தை மற்ற எந்த மனிதனுக்கும் கொடுக்காத அளவிற்கு வழங்கினான். எனவே, இஸ்லாத்தின் உண்மையான கருத்தை அடைவதற்கான முக்கிய வழியாக அல்லாஹ் அறிவையும் புரிதலையும் ஆக்கியுள்ளான்.

நோன்பு, தொழுகை, துஆ, மற்றும் அனைத்து இறைக் கட்டளைகளை நிறைவேற்றுதல் போன்ற வேறு வழிகளும் உள்ளன. அவை 600-க்கும் அதிகமான கட்டளைகளாக இருக்கின்றன. ஆனால், அல்லாஹ்வின் மகத்துவம், தவ்ஹீத் மற்றும் அவனது ஜலால் (மகிமை) மற்றும் ஜமால் (அழகு) போன்ற பண்புகள் பற்றிய அறிவே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளது. கவனமற்ற உள்ளமும் இறைவனைப் பற்றிய அறிவும் இல்லாத ஒருவர் நோன்பு நோற்பதற்கும், தொழுவதற்கும், இறைவனிடம் மன்றாடுவதற்கும், இன்ன பிற நற்செயல்களைச் செய்வதற்கும் ஆற்றலைப் பெறமாட்டார். எல்லா நற்செயல்களும் இறைவனைப் பற்றிய அறிவு மற்றும் புரிதலின் மூலமே இயக்கம் பெறுகின்றன. மற்ற அனைத்து வழிமுறைகளும் இதிலிருந்து தோன்றியவையும் இதன் சந்ததியுமே ஆகும்.




இந்த அறிவின் துவக்கம் அல்லாஹ்வின் ரஹ்மானிய் -யத்தின் பிரதிபலிப்பின் விளைவாக உண்டாகிறது. அது எந்த செயலும் துஆவும் இல்லாமல் வழங்கப்படுகின்ற ஒரு தூய அருள் ஆகும். அவன் விரும்புபவரை நேரான வழியில் நடத்துகிறான். அவன் விரும்புபவரை வழி தவறச் செய்கிறான்.

இப்படி இந்த அறிவு நல்லொழுக்கத்தாலும் நல்ல நம்பிக்கையாலும் வளர்ந்து இறுதியில் வஹீ (இறை வெளிப்பாடு) என்ற வடிவில், அல்லாஹ்வின் வசனமாக இறங்கி, இஸ்லாம் என்கின்ற ஒளியால் முழு உள்ளத்தையும் ஒளியூட்டுகிறது.

118 (தாஹா 20:115)

119 (அல் அனாம் (6:164) இவ்வாறே எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது கட்டுப்பட்டு நடப்பவர்களில் நானே முதன்மையானவன்

120 (அந்நிஸா 4:114)

## இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதன் சிறப்பு

முழுமையான புரிதலின் நிலையில் இஸ்லாம் என்பது வெறும் வார்த்தையாக இல்லாமல், நாம் விபரித்துள்ள அதன் முழுமையான உண்மைத்தன்மை அடையப் பெறுகிறது. அப்போது மனித ஆன்மா இறைவனின் தவ்ஹீதின் முன் பணிந்து விடுகிறது. அப்போது இரண்டு பக்கங்களிலிருந்தும்: ‘என்னுடையது அனைத்தும் உன்னுடையதே’ என்று அறிவிக்கப்படுகிறது. அதாவது, மனித ஆன்மா: ‘இறைவனே!, என்னுடையது அனைத்தும் உன்னுடையதே’ என்று ஒப்புக் கொள்கிறது. அதே நேரத்தில் அல்லாஹ் கூறுகிறான்: ‘என் அடியானே! என்னிடம் உள்ள விண்ணகமும் பூமியும் உன்னிடமும் உள்ளது.’ இந்த நிலையைப் பற்றியே திருக்குர்ஆனில் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ ؕ
اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا ؕ 121

நீர் கூறுவீராக! தமக்குத் தாமே (பாவஞ்செய்து) அநீதி இழைத்துக் கொண்ட என் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிக்கிறான். (39:54)

இங்கு ‘அல்லாஹ்வின் அடியார்’ என அல்லாஹ் கூறாமல், இறைத்தூதர் (ஸல்) அவர்களை: ‘என் அடியாரே’ எனக் கூறச் செய்தான். அவனது எல்லையற்ற கருணை பற்றிய நற்செய்தியினை அறிவிக்கவும் அதன் மூலம் எவர்கள் தமது பாவங்களின் காரணமாக உடைந்த உள்ளத்தோடு இருக்கின்றனரோ அவர்கள் ஆறுதல் பெறுவதற்காகவும் அல்லாஹ் இந்த வசனத்தை இந்த வடிவில் இறக்கியுள்ளான். அல்லாஹ் தனது கருணையின் ஒரு மாதிரியை வெளிப்படுத்தவும் தனது நேர்மையான அடியாருக்கு அவன் எவ்வாறு சிறப்பான அருட்களை வழங்கியுள்ளான் என்பதை வெளிப்படுத்தவும் விரும்பினான். இந்த வசனத்தில் ‘நீர் கூறுவீராக! எனது அடியார்களே!’ என்ற சொற்களின் மூலம் அல்லாஹ் இவ்வாறு கூற நாடுகிறான். அதாவது, “நான் நேசித்த இந்த தூதரைப் பாருங்கள். அவர் என்னை முழுமையாகப் பின்பற்றியதால் அவரிடம் என்னுடைய அனைத்தும் அவருக்கே என்று கொடுத்துள்ளேன். எவர் மீட்பைப் பெற விரும்புகிறாரோ, அவர் அன்னாரது அடியாராக ஆகி விட வேண்டும். அதாவது அவர் அன்னாரது அடிமையைப் போன்று அன்னாரை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அப்போது அவர் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.”

وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّنْ مُّشْرِكٍ 122

நாம் குறிப்பிடும் வசனத்தில், ஒருவர் இரட்சிப்பை விரும்பினால், அவர் இந்த நபியுடன் அடிமை என்ற உறவை

121 (அஸ்ஸுமர் 39:54) ‘அப்த்’ என்பதற்கு அரபியில் அடிமை என்றும் பொருள் உண்டு.

122 (அல் பகரா 2:222) நம்பிக்கை கொண்ட ஓர் அடிமை இணை வைப்பவரை விட சிறந்தவராவார்.




நிலைநிறுத்த வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. அதாவது, அவர் அவர்களுடைய கட்டளைகளுக்குப் புறம்பாக நடக்கக் கூடாது. ஓர் அடிமை எப்படி கட்டுப்பட்டிருக்கிறானோ, அதுபோலவே, அவர் அன்னாருக்கு முழுமையாக கீழ்ப்படிய வேண்டும். அப்போது அவருக்கு இரட்சிப்பு கிடைக்கும். பரிதாபமாக, சில சஞ்சலமுற்ற ஆன்மாக்கள், இறையருளைப் பெற்ற இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள வெறுப்பினால், ‘குலாம் நபி’, ‘குலாம் ரஸூல்’, ‘குலாம் முஸ்த.ஃ.பா’, ‘குலாம் அஹ்மத்’, ‘குலாம் முஹம்மது’ போன்ற பெயர்களை வைத்திருப்பது தூதரை அல்லாஹ்வுடன் இணைத்து வைப்பதாகக் கருதுகின்றனர். ஆனால், இந்த வசனம் சொல்வது என்னவெனில், இப்பெயர்கள் இரட்சிப்புக்கான ஒரு வழியாக இருக்கின்றன என்பதே ஆகும். ஏனெனில் ‘அப்த்’ (அடிமை) என்ற வார்த்தையின் பொருள், அந்த நபர் எல்லா விதமான சுதந்திரத்தையும், தனிச் சிந்தனையையும் விலக்கிக் கொண்டு, தம்முடைய அதிபதிக்கு முற்றிலும் கீழ்ப்படிதலுடன் இருப்பதைக் குறிக்கிறது. ஆகவே, உண்மையை நாடுபவர்கள், இரட்சிப்பை விரும்பினால், இந்த நிலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளனர். இந்த வசனம் கீழ்க்கண்ட வசனத்தின் கருத்தையே கொண்டுள்ளது.

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ؕ 123

முழுமையாக பின்பற்றுதல் என்பது அப்த் என்ற சொல்லில் கூறப்பட்டுள்ள பற்றுதியையும், முழுமையான கீழ்படிதலையும் எதிர்பார்க்கிறது. அல்லாஹ் கூறும்: ‘என் அடியாரே!’ என்பதன் உண்மையான பொருள்: “என்னை பின்பற்றுவோரே! நீங்கள் பாவங்களில் மூழ்கி இருந்தாலும் அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழக்காதீர்கள். ஏனெனில் என்னைப் பின்பற்றியதன் அருளின் காரணமாக உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்.” இந்த வசனத்தில் உள்ள ‘அடிமைகள்’ என்ற வார்த்தையை அல்லாஹ்வின் அடிமைகள் எனக் கொண்டு பொருள்படுத்தினால், அதன் உண்மை அர்த்தம் சிதைக்கப்படுகிறது. ஏனெனில், நபி (ஸல்) அவர்களை நம்பாமல், அவரைப் பின்பற்றாமல் இருக்கிற சில இணைவைப்பவர்களையும், நிராகரிப்பவர்களையும் அல்லாஹ் அனைத்துப் பாவங்களுடனும் மன்னித்து விடுவான் என்பது

123 (ஆலஇம்ரான் 3:32) நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். அப்போதுதான்) அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை மன்னிப்பான்

உண்மை அல்ல. ஏனெனில் இத்தகைய விளக்கம், திருக்குர்ஆனின் தெளிவான அறிவிப்புகளுக்கு எதிரான -தாகும்.

அதனால், இந்த வசனத்தின் உண்மையான நோக்கம் என்னவெனில், இறையருளைப் பெற்ற நபி (ஸல்) அவர்களின் உண்மையான அடிமைகளாக மாறுகிறவர்கள், அல்லாஹ்வைத் தவிர அனைத்திலிருந்தும் அவர்களை விடுவிக்கும் ஒளி, ஈமான், அன்பு மற்றும் தீவிர பற்றினால் நிரப்பப்படுவர். அவர்கள் பாவங்களிலிருந்து விடுவிக்கப்படு -வார்கள் இவ்வுலகத்தில் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை அவர்களுக்கு வழங்கப்படும். மேலும், மனித இச்சைகளின் இருண்ட மற்றும் குறுகிய கல்லறைகளிலிருந்து விடுதலை பெறுவார்கள்.

இது பின்வரும் ஹதீஸ் மூலம் குறிக்கப்படுகிறது:

انا الحاشر الذى يحشر الناس على قدمی 124

மரணித்து விட்ட உலகத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அனுப்பியதன் மூலமாக அல்லாஹ் உயிர்ப்பித்தான் என்ற கருத்தை திருக்குர்ஆன் முழுவதும் காணலாம்.

அவ்வாறே, திருக்குர்ஆன் கூறுகிறது:

اِعۡلَمُوۡۤا اَنَّ اللّٰهَ یُحۡیِ الۡاَرۡضَ بَعۡدَ مَوۡتِهَا 125

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபிகள் பற்றியும் கூறப்பட்டது:

وَاَیَّدَهُمۡ بِرُوۡحٍ مِّنۡهُ 126

இந்த தூய ஆவியின் உதவி என்பது மனங்களை உயிர்த்தெழுப்புகிறது. ஆன்மீக மரணத்திலிருந்து விடுவிக் -கிறது. தூய அறிவையும் திறன்களையும் அளிக்கிறது. உறுதியான அறிவு மற்றும் தீர்க்கமான சான்றுகளுடன் ஒருவரை இறைவனின் நெருக்கத்துக்கு கொண்டு செல்கிறது...... இந்த அறிவு, அதாவது இரட்சிப்பு எந்த அறிவைச் சார்ந்து உள்ளதோ அந்த அறிவு, பரிசுத்த ஆவியால் அளிக்கப்படும் வாழ்வு இல்லாமல் பெற இயலாது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதின் மூலமே அந்த ஆன்மீக வாழ்க்கை கிடைக்கும் என்று திருக்குர்ஆன் தெளிவாக எடுத்துரைக்கிறது.

அவருடைய கட்டுப்பாட்டை நிராகரிக்கிறவர்கள் மரணித்தவர்களே என்றும், அவர்கள் அந்த ஆன்மிக வாழ்க்கையை உடையவர்கள் அல்ல என்றும் கூறுகிறது. ஆன்மிக வாழ்க்கை என்பது, பரிசுத்த ஆவியால் உயிர்ப்பூட்டப்படும் அறிவுத் திறன்களையும் செயற்பாட்டுத் திறன்களையும் குறிக்கிறது.

அல்லாஹ் மனிதனைப் பின்பற்றச் சொல்லும் கட்டளைகள் 600 இருக்கின்றன. இதற்கு பொருத்தமாக ஜிப்ரீலின் இறக்கைகளும் 600 ஆக இருக்கின்றன. இந்த 600 கட்டளைகளைக் குறிக்கின்ற ஜிப்ரீலின் இறக்கைகள் கீழ் மனிதத்தன்மையின் முட்டை வரவில்லையென்றால், இறைவனிடத்தில் தன்னை முற்றிலும் இழந்து விடுதல் என்ற குழந்தை பொரிக்கப்பட முடியாது. மனிதனின் உண்மை இயல்பு, 600 முட்டைகளை தாங்கும் திறனை உடையது. ஒருவரின் 600 முட்டைகளும் ஜிப்ரயீலின் 600 இறக்கைகளால் மறைக்கப்பட்டிருந்தால், அவர் முழுமையான மனிதராக, ஆன்மிகமாக முழுமையாகப் பிறந்தவராகவும், அவரது வாழ்க்கையும் முழுமையானதாகவும் இருப்பார். கவனமாக நோக்கினால், மனிதத்தின் முட்டையிலிருந்து பிறந்த ஆன்மிகப் பிள்ளைகள், ஹஸ்ரத நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் பரிசுத்த ஆவியின் அருளினால் மற்ற நபிமார்களின் ஆன்மிக சந்ததிகளை விட முழுமையானவர்கள் என திருக்குர்ஆன் கூறுகிறது: இதனையே திருக்குர்ஆன் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது.

كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ

“நீங்கள் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட சிறந்த மக்கள் ஆவீர்கள்.” (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 5, பக்கம் 186-197)

## தவ்ஹீதின் மீதான நம்பிக்கையை உயிர்ப்பித்த நபி (ஸல்) அவர்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உலகில் தோன்றி பல நூறு ஆண்டுகளாக செவிடர்களாக இருந்தவர் -களுக்கு செவிப்புலனை வழங்கினார்கள். பார்வையற்றவர் யார்? காது கேளாதவர் யார்? ஓரிறைக் கொள்கையை ஏற்காதவர் மற்றும் இந்த தவ்ஹீதை பூமியில் உயிர்த் -தெழுப்பிய தூதரை ஏற்காதவரே குருடரும் செவிடருமாவார்.

அந்த ஒரே தூதர் காட்டுமிராண்டிகளாக இருந்தவர்களை நற்பண்புள்ள மனிதர்களாக மாற்றி, பிறகு அவர்களை இறைத்தொடர்பு கொண்டவர்களாக மாற்றினார். இறையச்சத்தின் சூரியனாகிய அவர் பல தெய்வக் கொள்கையாலும் நாத்திகத்தாலும் தீய வாழ்வாலும் மரணித்துப் போயிருந்த ஆயிரக்கணக்கானவர்களை உயிர்த்தெழுப்பினார். நியாயத் தீர்ப்பு நாளின் ஒரு மாதிரி வெளிப்பட்டது. இது வெறும் வார்த்தையல்ல. இயேசு பேசியதைப்போல் வெறும் வார்த்தையல்ல.

இணைவைத்தல் மற்றும் மனிதனை வணங்குதல் ஆகிய இருளை அகற்றிய மக்காவில் தோன்றிய அந்த தூதர் (ஸல்) அவர்களே மனித குலத்தின் உண்மையான ஒளி ஆவார்கள். அன்னார் உலகை இருளில் மூழ்கியிருக்க கண்டார்கள். பின்னர் எந்த அளவிற்கு ஒளியினை வழங்கினார்கள் என்றால் முழுமையான இருளாக இருந்த இரவை பகலாக மாற்றினார்கள்.

அன்னாரது வருகைக்கு முன்னர் உலகம் எப்படி இருந்தது? பின்னர் அது எப்படி மாறியது? இந்த கேள்விக்கு பதில் தருவது கடினம் ஒன்றும் அல்ல. நம் மனசாட்சி உண்மையாய் இருந்தால் அன்னாருக்கு முந்தைய காலத்தில்

124 “நான் உயிர்த்தெழுப்புபவன். எனது வருகையினால் மரணித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள்.”

125 “அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுப்பு -கிறான்.” (57:18)

126 “அல்லாஹ் அவர்களுக்கு தூய ஆவியால் உதவினான்.” (58:23)

மக்கள் இறைவனின் மகத்துவத்தை மறந்து விட்டிருந்தனர் என்பதையும் அவதாரங்கள், கற்கள், நட்சத்திரங்கள், மரங்கள், மிருகங்கள், மரணித்தவர்கள் போன்றவற்றை இறைவனாகக் கருதி வழிபட்டனர் என்பதையும் கூறும். இழிந்த படைப்புகள் மகத்துவமும் தூய்மையும் மிக்க இறைவனின் இருக்கையில்  அமர வைக்கப்பட்டனர். அந்த மனிதர்களும் விலங்குகளும் மரங்களும் நட்சத்திரங்களும் உண்மையிலேயே இறைவன் என்றால் ஈஸாவும் அவர்களில் ஒருவராவார் - இந்த தூதர் தேவை இல்லை எனலாம். ஆனால் அவர்கள் இறைவன் அல்ல என்றால், மக்காவின் மலைக் குன்றில் நம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறிய அந்த வாதம் மிகப் பிரகாசமான ஒளியுடன் விளங்குகிறது. அந்த வாதம் என்ன? இறைவன், உலகத்தை ஆழமான இணைவைப்பின் இருளில் கண்டதும் அந்த இருளை அகற்ற அன்னாரை அனுப்பினான் என்பதே அது. இது வெறும் வாதம் அல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் முழுவதுமாக நிருபணத்துடன் உறுதி செய்யப்பட்டதாகும்.



எந்த ஒரு நபியின் மேன்மையும் பிற நபிமார்களை விட மனிதகுலத்தின் மீதான அனுதாபத்தை வெளிப்படுத்தும் செயல்களின் மூலமாக  நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், மக்களே! சாட்சி கூறுங்கள்! இந்த அடிப்படையில் முஹம்மது (ஸல்) அவர்களைப் போல் யாரும் இல்லை.......... படைப்புகளை வணங்கும் பார்வையற்றவர்கள் இந்த மாநபி (ஸல்) அவர்களை அடையாளம் காணவில்லை. அவர்கள் மனிதகுலத்தின் மீதான அனுதாபத்திற்காக ஆயிரக் -கணக்கான உதாரணங்களை நிலைநாட்டியுள்ளார்கள். இருப்பினும், இந்த தூய தூதர் (ஸல்) அவர்கள் அடையாளங் காணப்படும் நேரம் வந்து விட்டதாக நான் காண்கின்றேன். நீங்கள் விரும்பினால் எனது இந்த கூற்றை பதிவு செய்து கொள்ளுங்கள். அதாவது, மரணித்தவர்களை வழிபடுதல் நாளுக்கு நாள் குறைந்து இறுதியில் மறைந்துபோய் விடும். இறைவனை எதிர்க்க மனிதன் சக்தி வாய்ந்தவனா? ஒரு அற்பமான துளி இறைவனின் திட்டத்தை முறியடிக்க முடியுமா? இறைவனின் கட்டளையை மனிதத் திட்டங்கள் அவமதிக்க முடியுமா?

கேட்கக் கூடியவர்களே கேளுங்கள் சிந்திக்கக் கூடியவர்களே சிந்தியுங்கள்: நினைவில் கொள்ளுங்கள். உண்மை வெளிப்படுத்தப்படும். எவர் உண்மையான ஒளியாக இருப்பாரோ அவர் பிரகாசிப்பார். (மஜ்மூஆ இஷ்திஹாரத், தொகுதி 2, பக்கம் 305-307)

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நேசிப்பதால் கிடைக்கும் இறையருட்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உண்மையான உள்ளத்தோடு கட்டுப்படுபவதும் அவர்களை நேசிப்பதும் ஒருவரை இறைநேசம் பெற்றவராக ஆக்கி விடுகிறது என்பது என் சொந்த அனுபவம் ஆகும். அவ்வாறு செயல்படும் ஒருவரின் இதயத்தில், தன் மீதான அன்பிற்கான ஒரு தீவிரநேசத்தை அல்லாஹ் உருவாக்குகிறான். அவர் தனது இதயத்தை மற்ற எல்லாவற்றிலிருந்தும் விலக்கி, இறைவன் மீதான நேசத்திற்காகவும் விருப்பிற்காகவும் மட்டும் வாழ்கிறார். அதன் பின், இறைவனின் அன்பின் ஒரு சிறப்பு வெளிப்பாடு அவர் மீது இறங்குகிறது. அது அன்பும் பக்தியும் நிறைந்த நிறத்தில் அவரை முழுமையாக ஆட்கொண்டு, பெரிய வலிமையுடன் அவரைத் தன்னை நோக்கி இழுக்கிறது. அதன் காரணமாக அவர் தனது மனஇச்சைகளை வெல்கிறார். எல்லாத் திசைகளிலும் அல்லாஹ்வின் விசித்திர செயல்கள், அவருக்கு ஆதரவாகவும் உதவியாகவும் தோன்றுகின்றன. (ஹகீக்கத்துல் வஹி, ரூஹானீ ஹஸாயின், தொகுதி 22, பக்கம் 67-68)

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதால் கிடைக்கும் அருள்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நிறைய ஸலவாத் ஓதுவதால், இறைவனுடைய அருள் ஓர் அற்புத ஒளியாக நபி (ஸல்) அவர்களிடம்  செல்கிறது. அது அவர்களின் உள்ளத்தில் ஈர்க்கப்பட்டு, பின்னர் அதிலிருந்து எண்ணற்ற ஒளிக்கற்றைகளாக ஒவ்வொருவரையும் அவரவர் திறனுக்கு ஏற்ப சென்றடைகிறது. உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊடகமின்றி எந்த ஓர் அருளும் எவரையும் சென்றடைய முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது அன்னாரது அரியணையை இயங்கச் செய்கிறது. அதிலிருந்து ஒளிக்கற்றைகள் பரவுகின்றன. எவர் இறைவனின் அருளை பெற விரும்புவாரோ  அவர் அன்னார் மீது தொடர்ச்சியாக ஸலவாத் ஓதி வர வேண்டும். அதனால் இறைவனின் அருள் ஈர்க்கப்படும். (அல் ஹகம், 28 பிப்ரவரி 1903, பக்கம் 7)

ஓர்  இரவில் இந்த எளியவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு நிறைய ஸலவாத் ஓதினேன் என்றால் எனது மனமும் ஆன்மாவும் அதன் மணத்தால் நிரம்பின. அந்த இரவு கனவில் வானவர்கள் ஒளியால் நிரம்பிய தண்ணீர் பைகளை எனது வீட்டிற்கு  கொண்டு வந்தனர். அவர்களில் ஒருவர் கூறினார்: “இவை நீங்கள் முஹம்மது (ஸல்) மீது ஓதிய ஸலவாத்களின் பலன்கள் ஆகும்.” (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ ஹஸாயின் தொகுதி 1, பக்கம் 598, அடிக்குறிப்பு 3)

(தொடரும்)

# துன்பத்தின்போது பிறர் தரும் ஆறுதலின் தாக்கம் இறைஅறிவிப்பின் தேவைக்கு ஓர் ஆதாரம்!

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இது இயற்கையின் ஒரு நிலையான விதி. அதாவது, மனிதன் எப்போது பாவ இச்சைகளால் ஆட்கொள்ளப்படுகிறானோ, அல்லது ஓர் ஆன்மிக இடரால் பாதிக்கப்படுகிறானோ உதாரணமாக, அவனது கோபம் எரிவது அல்லது அவனது காம ஆசைகள் தூண்டப்படுவது அல்லது அவன் ஏதாவது நெருக்கடியில் சிக்கிக் கொள்வது அல்லது ஒரு பேரிழப்பால் துக்கத்தில் மூழ்கி விடுவது அல்லது வேதனைக்கு உள்ளாகுவது அல்லது மனதையும் ஆன்மாவையும் ஆட்கொண்டு விட்ட ஒரு தீய ஆசை அல்லது ஆன்மிக கலக்கம் நிகழ்வது போன்ற சந்தர்ப்பங்களில் அவன் தனக்குத் தானே அறிவுரை கூறுவதன் மூலமாகவே அந்த நிலைகளைச் சரி செய்து விட முடியாது.

அத்தகைய எண்ணங்களை நீக்க, அவனுக்கு அறிவுரை கூறும் ஒருவரின் தேவை ஏற்படுகிறது. அந்த அறிவுரை கூறுபவர், கேட்பவனின் மனதில் மரியாதையை உருவாக்கக் கூடியவராகவும், உண்மையில் நேர்மையானவராகவும், அறிவில் நிறைவை உடையவராகவும், தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற வல்லவராகவும், மேலும் அவரது வார்த்தைகளில் பயம், நம்பிக்கை அல்லது ஆறுதலை உருவாக்கும் சக்தியைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

ஏனென்றால், இது தெளிவாகவே தெரிகிறது: ஒருவன் பல நேரங்களில் ஒரு பாவத்தைப் பாவமாகவே புரிந்து கொள்கிறான். அல்லது பொறுமையின்மையுடன் செய்யப்படும் ஒரு செயலைப் பொறுமையற்றதென்று உணர்கிறான். ஆனால், அந்த உணர்வுகளுக்கு இடையிலேயே கவனக்குறைவு அல்லது திடீர் துக்கம் போன்ற இருண்ட திரைகள் அவனது உள்ளத்தை திரையிட்டு விடுகின்றன. அந்தத் திரையை அகற்றுவதற்கான ஒரே வழி என்னவென்றால், அவனது மனதில் மரியாதையும் நம்பிக்கையும் உள்ள ஒருவர் சூழ்நிலைக்கு ஏற்ப அவனை அறிவுறுத்தி, நற்செயல்களை மேற்கொள்ள தூண்டுவதன் மூலம், அல்லது அவனை எச்சரிப்பதன் மூலம், அல்லது ஆறுதல் கூறுவதன் மூலம் அவனுக்கு நிம்மதியை வழங்க வேண்டும்.

அவரது சொற்கள், கேட்பவருக்கு ஏற்கனவே தெரிந்த விஷயங்களைக் கூறினாலும் கூட, வியத்தகு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு மந்தமான மனிதனைத் தூண்டிச் செயலில் ஈடுபடுத்தும், ஒரு செயலற்றவனைச் செயலாற்ற வைக்கும், ஒரு பலவீனமுடையவனை வலிமைமிக்கவனாக்கும், குழப்பமடைந்தவனை நிம்மதிக்குட்படுத்தும் சக்தி அவற்றில் இருக்கும். அறிவுள்ள ஒருவர், தனது அகந்தையின் மேலீட்டால் கவலைக்குள்ளான நிலையில், இப்படியொரு சிகிச்சை தனக்கு தேவை என்பதை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்.

இது மட்டுமல்ல; அதிக தூய்மையடைந்தவர்கள், உண்மையைத் தேடுபவர்கள், பாவத்தின் ஆவேசம் மற்றும் சோம்பேறித்தனத்தின் நச்சுத்தன்மையை ஆரம்பத்திலேயே வெறுக்கும் நேர்மையான உள்ளங்களைக் கொண்டவர்கள், தமது அகந்தை மேலோங்கும் சந்தர்ப்பங்களில் தமது அக நிலையின் இறுக்கத்தைக் குணப்படுத்துவதற்காக ஏதாவது இறைதொடர்புள்ள ஒரு மனிதரின் நாவிலிருந்து தூண்டுதல், எச்சரிக்கை அல்லது ஆறுதல் தரும் வார்த்தைகளைக் கேட்பதற்காக ஒரு நோயாளி சிகிச்சைக்காக ஏங்குவது போல் தாமாகவே ஏங்குகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், மனித இயல்பிலேயே இது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருவன் எவ்வளவு அறிவுள்ளவனாக இருந்தாலும், அவனது சொந்த வார்த்தைகள் மட்டுமே அவனிடம் எல்லா நேரமும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. பாவ ஆசைகள் அல்லது ஆன்மிக சோதனைகளால் அவன் மூடப்படும் போது, அவனது மனதில் யோசிப்பதற்கான சக்தியே குறைந்து விடுகிறது. அப்போதைய நிலைமையில், அறிவுரை, எச்சரிக்கை அல்லது ஆறுதல் கூறும் வார்த்தைகள், அவனல்லாமல் வேறொருவரிடமிருந்து வர வேண்டும்............

இந்த எல்லா உண்மைகளையும் கவனித்துப் பார்த்தால், ஒரு புத்திசாலி மனிதன் இவ்வாறே முடிவுக்கு வருவான்: அல்லாஹ் மனித இயல்பை இப்படித்தான் வடிவமைத்திருக்கிறான். இந்த வடிவமைப்பே கூறுகிறது: ஞானமிக்க இறைவன், பலவீனமான மனிதனை அவனது சொந்த கற்பனைகளிடமும் சந்தேகங்களிடமும் விட்டு வைக்கவில்லை. மாறாக, அவனுக்கு ஆறுதல், நிம்மதி, இச்சைகளை அமுக்குதல், ஆன்மிக அமைதியின்மையை விலக்குதல் ஆகியவற்றை அளிக்கக் கூடிய அறிவுரையாளர்களை அல்லாஹ் நியமித்திருக்கிறான். மேலும் அவனது நோய்களை குணமாக்கக்கூடிய, ஆன்மீக வியாதிகளுக்கு மருந்தாக அமையக் கூடிய தனது வார்த்தையையும் அவனுக்கு வழங்கியிருக்கிறான். இறைஅறிவிப்பின் தேவையை நிரூபிப்பதற்கு வேறு எந்த விதமான வழிமுறையும் தேவையில்லை. காரணம், இறைவனுடைய இயற்கையின் சட்டமே இதை நிரூபிக்கிறது!

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4 பக்கம் 81-82 ஆங்கிலப் பதிப்பு)

(தமிழில்: அபூ அப்தில்லாஹ்)

# துஆ

## ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

أجيب كل دعائك (உஜீபு குல்ல துஆயிக - நான் உம்முடைய எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன்). என்னுடைய எஜமானனின் இந்த தெளிவான வாக்குறுதி என்னுடன் இருக்கிறது. ஆனால் كل (குல்ல - எல்லா) என்பதற்கான பொருள் என்னவென்றால், எந்த துஆக்களை இறைவன் ஒப்புக் கொள்ளாமல் இருப்பதனால், கஷ்டம் ஏற்படுகிறதோ அவற்றின் மூலம் அல்லாஹ் தர்பிய்யத் மற்றும் சீர்திருத்தத்தை விரும்புகிறான் என்றால், பிறகு மறுப்பதிலேயே துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் இருக்கிறது என்பதை நான் நன்றாக தெரிந்திருக்கிறேன். சில சமயங்களில் மனிதன் ஏதாவது துஆவில் தோல்வி அடைந்து விடுகிறான். மேலும் இறைவன் அவனது துஆவை மறுத்து விட்டான் என்று கருதுகிறான். ஆனால் இறைவன் அவனது துஆவை மறுக்கவில்லை. மாறாக, அந்த துஆவை மறுக்கும் நிலையிலேயே ஒப்புக் கொள்ளப்படுதல் இருக்கிறது. ஏனென்றால், உண்மையில் அந்த மறுப்பதிலேயே அவனுக்கு நன்மை மற்றும் மேன்மை இருக்கிறது. மனிதன் குறைமதி உடையவனாகவும் எதிர்காலத்தைப் பற்றி அறியாதவனாக -வும் இருக்கிறான். மனிதன் மேலோட்டமாக பார்ப்பவனாக இருப்பதனால் அல்லாஹ்விடம் ஏதாவது துஆ செய்யும் போது, அது அவனுக்கு பயனுள்ள பொருளைத் தரவில்லை என்றால், பிறகு அவன் என்னுடைய துஆவை இறைவன் கேட்கவில்லை என்று இறைவன் மீது தப்பெண்ணம் கொள்வது அவனுக்கு தகுந்ததன்று. இறைவனோ ஒவ்வொருவரின் துஆவையும் கேட்கிறான்.

ادْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ உத்வூனீ அஸ்தஜிபுலகும் - நீங்கள் என்னிடம் வேண்டுங்கள்; நான் உங்கள் வேண்டுதலுக்குப் பதிலளிப்பேன் என்று கூறுகிறான். (அல் மு.்.மின் 40:61) இதுவே இரகசியம் ஆகும். அதாவது துஆ செய்பவருக்கு நன்மை மற்றும் பயன் அந்த துஆவை மறுப்பதிலேயே இருக்கிறது. துஆவின் நிபந்தனை இதுவே ஆகும்.

அல்லாஹ் துஆ ஒப்புக் கொள்வதில் நம்முடைய எண்ணம் மற்றும் ஆசையைப் பின்பற்றுபவனாக இருக்க மாட்டான். பாருங்கள்! குழந்தைகள், தனது தாய்க்கு எந்த அளவு பாசத்திற்குரியவர்களாக இருக்கின்றனர். மேலும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு எந்த ஒரு கஷ்டமும் ஏற்படக் கூடாது என்று விரும்புகின்றனர். ஆனால் ஒருவேளை குழந்தை அடம் பிடித்து அழுது கூர்மையான கத்தி அல்லது நெருப்பின் தீப்பொறியைக் கேட்டால், பிறகு அன்பும் இரக்கமும் கொண்ட தாய் அவளுடைய குழந்தையை நெருப்பின் தீப்பொறியைக் கையில் கொடுத்து கையை எரிக்கவோ அல்லது கூர்மையான கத்தியை கையில் கொடுத்து கையை வெட்டவோ விரும்புவாளா? நிச்சயமாக இல்லை. இதிலிருந்து துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனையை அறிய முடிகிறது. எனக்கு இந்த விஷயத்தில் சொந்த அனுபவம் இருக்கிறது. அதாவது, துஆவில் ஏதாவது பகுதி தீயதாக இருந்தால், பிறகு அந்த துஆ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படுவ -தில்லை. இந்த விஷயம் நன்றாக தெரிகிறது, நம்முடைய அறிவு திடமானதாகவும் சரியானதாகவும் இருப்பதில்லை. அதிகமான வேலைகளை நாம் மிகவும் மகிழ்சியுடனும் அருளுக்குரியதாகவும் நினைத்து செய்கிறோம். மேலும் தன்னுடைய எண்ணத்தில் அதன் விளைவு மிகவும் அருளுக்குரியதாக இருப்பதாகக் கருதுகிறோம். ஆனால் அதன் முடிவு துக்கமாகவும் கஷ்டமாகவும் ஆகி விடுகிறது. ஆக, மனிதனது ஆசைகள் எல்லாவற்றையும் நாம் சரியானதாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் மனிதன் தவறிழைப்பவனாகவும் மறப்பவனாகவும் இருக்கிறான். எனவே அவனுடைய சில ஆசைகள் தீயதாக இருக்கும்; தீயதாக இருக்கவும் செய்கிறது. அல்லாஹ் ஒருவேளை அதை ஏற்றுக் கொண்டு விட்டான் என்றால் பிறகு, இந்த விஷயம் அவனது ரஹ்மத்தின் அரியணைக்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது. இது ஓர் உண்மையான மற்றும் திடமான விஷயமாகும். அதாவது அல்லாஹ் தன்னுடைய அடியார்களின் துஆக்களை கேட்கிறான். மேலும் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கான தகுதியையும் வழங்குகிறான். ஆனால் எல்லாவற்றையும் கேட்பதில்லை. ஏனென்றால் ந.்.ப்ஸின் உற்சாகத்தின் காரணமாக மனிதன் முடிவையும் விளைவையும் பார்க்க மாட்டான். மனிதன் துஆ செய்கிறான். ஆனால் அல்லாஹ் உண்மையான நன்மையை நாடுபவனாகவும் விளைவை பார்ப்பவனாகவும் இருக்கிறான். அந்த துஆவை ஏற்றுக் கொள்ளப்படுவதனால் துஆ செய்பவருக்கு ஏற்படும் தீமைகளையும் தீய விளைவுகளையும் அவன் கருத்தில் கொண்டு அதை மறுத்து விடுகிறான். மேலும் இந்த துஆ ரத்து செய்யப்படுவதே அவனது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதாக இருக்கிறது.

மேலும் எவ்வாறான துஆக்களில் மனிதன் ஆபத்துகள் மற்றும் துயரங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறானோ அவற்றை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான். ஆனால் ஆபத்தான துஆக்களை ரத்து செய்வதன் மூலம் ஏற்றுக் கொள்கிறான். எனக்கு இந்த இல்ஹாம் மீண்டும் மீண்டும் வந்தது. அதாவது أجيب كل دعائك (உஜீபு குல்ல துஆயிக - நான் உம்முடைய எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வேன்.) வேறு வார்த்தைகளில் இவ்வாறு கூறலாம். அதன் உண்மை நிலையில் பயனுள்ளதாக இருக்கும் எல்லா துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த எண்ணம் என்னுடைய உள்ளத்தில் வரும்போது என்னுடைய ரூஹ் இன்பத்தாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்து விடுகிறது. எனக்கு முதன் முதலாக இந்த இல்ஹாம் வந்து ஏறக்குறைய 25, 30 வருடங்கள் இருக்கும். எனக்காகவும் என்னுடைய நேசத்திற்குரியவர்களுக்காகவும் செய்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. பிறகு இந்த விஷயத்தில் கருமித்தனம் இருக்கக் கூடாது என்று நான் எண்ணினேன். ஏனென்றால், இது ஓர் இறைஅன்பளிப்பாகும்.

மேலும் அல்லாஹ் இறையடியார்களின் பண்பாகக் கூறுகிறான்: وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ (வமிம்மா ரஸக்னாஹும் யுன்.்.பிகூன் - நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்து கொண்டிருப்பர்). (அல் பகரா 2:4)

ஆக, நான் என்னுடைய நண்பர்களுக்காக இந்தக் கொள்கையை வைத்திருக்கிறேன். அதாவது, அவர்கள் (துஆவிற்காக) நினைவூட்டினாலும் சரி, நினைவூட்டாவிட்டா -லும் சரி, ஏதாவது அபாயமான விஷயத்தை கூறினாலும் சரி, கூறாவிட்டாலும் சரி அவர்களின் மார்க்க மற்றும் உலக நன்மைகளுக்காக துஆ செய்யப்படுகிறது.

(மல்.்.பூஸாத் தொகுதி 1 பக்கம் 91, 92)




✧✧✧ தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத் ✧✧✧

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (ரஹி) அவர்கள் பின்வரும் வசனத்தை ஓதினார்கள்:

قُلْ اِنْ كَانَ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ وَاِخْوَانُكُمْ وَاَزْوَاجُكُمْ وَعَشِيْرَتُكُمْ وَاَمْوَالُ ۨاقْتَرَفْتُمُوْهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسٰكِنُ تَرْضَوْنَهَآ اَحَبَّ اِلَيْكُمْ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَجِهَادٍ فِيْ سَبِيْلِهٖ فَتَرَبَّصُوْا حَتّٰى يَاْتِيَ اللّٰهُ بِاَمْرِهٖ ۗ وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْفٰسِقِيْنَ ۧ

(சூரா தவ்பா வசனம் 24)

பின்னர் கூறினார்கள்: கடந்த ஜுமுஆ குத்பாவில் நான் திருக்குர்ஆனின் மற்றொரு வசனத்தை ஓதினேன்:

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

முஹம்மதே (ஸல்)! இவ்வாறு அறிவிப்பீராக! நீங்கள் உண்மையிலேயே அல்லாஹ்வை நேசித்தால் அல்லது உண்மையிலேயே அல்லாஹ்வை நேசிக்க விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் நிச்சயமாக உங்களை நேசிப்பான். (சூரா ஆல இம்ரான் வசனம் 32)



இந்த விஷயத்தின் சில அம்சங்களை நான் கடந்த ஜுமுஆ உரையில் விளக்கினேன். இன்று சிலவற்றை விளக்குவேன். ஆனால் அதற்கு முன், நான் இப்போது ஓதிய இரண்டாவது வசனத்தின்படி, நாம் அல்லாஹ்வை நேசிப்பதாகக் கூறினால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படியவும் பின்பற்றவும் கட்டளை இடப்பட்டதற்கான காரணத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மேலும் இந்த இரண்டிற்கும் இடையிலான தர்க்கரீதியான தொடர்பு என்ன?

அவரை எப்படி பின்பற்ற முடியும்? எந்த விதத்தில் அவரைப் பின்பற்றும்படி நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது? ஒரு நபர் தனது நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறார். சில சமயங்களில் அவர் தனது வழிகாட்டிக்குக் கீழ்ப்படிகிறார். அவருக்கு எந்த வகையான பணி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவர் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார். ஆனால் இந்த இரண்டு வகையான பின்பற்றுதல்களும் அன்பினால் வந்தது அல்ல. பெரும்பாலும், அன்பிற்குப் பதிலாக, இவற்றில் வெறுப்பின் ஒரு பகுதி உள்ளது. உலகில் மிகவும் கொடூரமான சர்வாதிகாரிகள் இருந்திருக்கிறார்கள், இன்றும் சிலர் இருக்கிறார்கள். அவர்களின் நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் அவர்களுக்குக் கட்டுப்படுகிறார்கள், ஆனால் அவர்கள் வெறுப்புடன் அவ்வாறு செய்கிறார்கள். எனவே, அல்லாஹ் ஒரு கொடுங்கோல் சர்வாதிகாரியால் வழங்கப்பட்டதைப் போன்று ஒரு வகையான கட்டளையைப் பிறப்பித்துள்ளானா? (நஊதுபில்லாஹி மின் ஸாலிக்) நீங்கள் என் அதிகாரத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய மறுக்கத் துணிய மாட்டீர்கள். எனவே நீங்கள் என்னை நேசித்தால் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுங்கள். இந்த வசனத்தின் நோக்கம் இதுதானா? கண்டிப்பாக அவ்வாறில்லை.

இந்த வசனம் اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ 'நீங்கள் அல்லாஹ்வை நேசித்தால்' என்று தொடங்குகிறது. எனவே அதில் சர்வாதிகாரம் அல்லது அடிமைத்தனம் என்ற கருத்துக்கு இடமில்லை. அன்பின் நிபந்தனை, நீங்கள் என்ன செய்தாலும் அது அன்பின் அடிப்படையில்தான் என்பதை தெளிவுபடுத்தி உள்ளது. எனவே, இறைவன் மீதான உங்கள் அன்பிற்கும், அது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு பணி செய்யவும் கட்டுப்படுதலாகவும் மாற்றப்பட வேண்டும் என்ற கட்டளைக்கும் இடையே ஒரு பகுத்தறிவுமிக்க தொடர்பு உள்ளது. எனவே, இந்தக் கட்டுப்படுதலின் முக்கிய அம்சம் அன்பாக இருக்க வேண்டும், மேலும் இந்தக் கட்டுப்படுதல் அன்பினால் இருக்க வேண்டும்.

## நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் விளக்கம் மற்றும் அதன் தர்க்கரீதியான முடிவு:

அடுத்த கேள்வி: கட்டளையினால் அன்பு செலுத்த முடியுமா? அல்லாஹ், 'நீ என்னை நேசிக்கிறாயா?' என்று கேட்கிறான். நாம், ஆம்! நாங்கள் உன்னை நேசிக்கிறோம் என்று சொல்கிறோம். உன் அழகு உலகம் முழுவதும் வெளிப்படுவதை நாங்கள் காண்கிறோம். உன் அருள்கள் எங்களுக்கு வரம்பற்றவையாகும். இரவும் பகலும் எங்களுக்கு வழங்கப்படுகின்றன. இரவிலும் பகலிலும் ஒவ்வொரு கணமும் உன் அருளை நாங்கள் அனுபவிக்கின்றோம். சுருக்கமாக, ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நிமிடமும், பிரபஞ்சத்தின் அழகில் உன் கருணையின் வெளிப்பாட்டை நாங்கள்

காண்கின்றோம், அதன் காரணமாக நாங்கள் உன்னை அதிகமாக நேசிக்கின்றோம். நீ எங்களுக்கு அன்றாட உணவுக்கான வழிகளை வழங்கியுள்ளாய். உன் அன்பு மற்றும் கருணையால், நீ எங்களுக்கு எல்லா வகையான அருட்கொடைகளையும் வழங்கியுள்ளாய். வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை நீ கருணையுடன் வழங்கியுள்ளாய். மேலும் மனிதன் தொடர்ந்து முன்னேறிச் செல்லும் முன்னேற்றச் சட்டங்களை உருவாக்கியுள்ளாய்.

சுருக்கமாக, இந்த விஷயத்தை உள்ளடக்க முடியாது. ஆனால் சுருக்கமாகச் சொன்னால், ஒரு மனிதன், “நாங்கள் உன்னை நேசிக்கிறோம். ஏனென்றால் உன்னை நேசிப்பதற்கான காரணங்கள் உள்ளன, மேலும் உன் அழகு உலகில் எங்கும் பரவியுள்ளது என்பதற்கான சான்றுகள் உள்ளன.” அப்படியானால் நாம் ஏன் அன்பு செய்ய உத்தரவிடப்பட வேண்டும்? இந்தக் கட்டளைக்கு அல்லாஹ்வின் பரிபூரண ஞானம் இருப்பதால், அது எந்த வகையான அபத்தத்தையும் கொண்டிருக்க முடியாது. எனவே, ஒரு கட்டளைக்கு பதிலளிக்கும் விதமாக நாம் அன்பு செலுத்த வேண்டும் என்று இறைவன் கோருகிறான் என்ற கருத்தை நாம் கை விட வேண்டும். உங்களில் யாராவது அவனை நேசித்தால், அதற்கு பதிலளிக்கும் விதமாக அவனிடமிருந்தும் அன்பின் வெளிப்பாடு உள்ளது.




ஒரு பொருளையோ அல்லது ஓர் உயிரினத்தையோ சுட்டிக்காட்டி, அவன் கூறுகிறான், “நீங்கள் என்னை நேசித்தால், மனிதர்களிடையே எனது அன்பின் வெளிப்படையான பிரதிபலிப்பை நான் உங்களுக்குக் காண்பிப்பேன். நீங்கள் பிரபஞ்சத்தைக் கவனிப்பது போல, எங்கும் நீங்கள் அதில் அழகைக் கண்டு அதன் மீது காதல் கொள்வது போல, எனது அன்பு அலங்கரித்த மற்றும் எனது அன்பு அழகுபடுத்திய ஒரு (எனது) அன்பானவரைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்வேன். அவரைப் பார்த்து, அவரை நேசித்து, தீவிர அன்புடன் அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.” இதுவே இந்த வசனத்தின் அடிப்படைக் கருத்து. இது வேறு சில வசனங்களிலும் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

இது ஒரு வகையில் அல்லாஹ்விடமிருந்து வந்த பதில் “நீ என்னை நேசிக்கிறாய் அல்லது என்னை உண்மையாக நேசிக்க விரும்புகிறாய், ஆனால் நான் நேசிக்கும் எந்த உண்மையான மற்றும் நேர்மையான அடியாரையும் உனக்குத் தெரியாது. நான் நேசிக்கும் ஒருவரை நீ பின்பற்றினால், நான் உன்னை நேசிக்கத் தொடங்குவேன் என்பது முற்றிலும் உறுதியாகும்.” அல்லாஹ் நேசிக்கும் ஒருவர் அழகாக இருக்க வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் வெறுக்கத்தக்க ஒருவரை நேசிக்க மாட்டான். அல்லாஹ் யாரை நேசிக்கிறான் என்று கூறுவானோ அந்த நபர் அழகாக இருக்க வேண்டும், அது வேறு விதமாக இருக்க முடியாது. எனவே, நீங்கள் நிச்சயமாக மறைமுகமான செய்தியைத் தேட வேண்டும்: நீ என்னை நேசிக்கிறாய் என்று கூறி (என்) அன்பை விரும்பினால், என்னை மிகவும் நேசித்த நபரைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்வேன். அவர் ஆரம்பத்திலும் அழகாக இருந்தார், ஆனால் நான் அவரை மிகவும் நேசித்ததால் அவரது தனிப்பட்ட அழகு அதிகரித்தது. எனவே, அவர் நடந்து வந்த பாதைகளைப் பின்பற்றுங்கள். பின்னர் அதே அழகு உங்களிடம் வளரத் தொடங்கும், நான் உங்களுடைய அந்த அழகை நேசிக்கத் தொடங்குவேன்.

### புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு இல்லாமைக்கு ஃபிஸ்க் என்று பெயரிடப்பட்டுள்ளது:

இந்த வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள முழுமையான பதில் இதுதான். திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. இவற்றில், அதை மிக விரிவாக விளக்கும் வசனம் நான் ஆரம்பத்தில் ஓதிய வசனமாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

அதன் பொருள்: முஹம்மதே! நீர் (நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுவீராக: உங்கள் மூதாதையர்களும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் உடன்பிறப்புகளும், உங்கள் மனைவிகளும், உங்கள் குடும்பத்தினர்களும் நீங்கள் சம்பாதித்த பொருள்களும் நஷ்டமடைந்து விடுமோ என்று நீங்கள் அஞ்சும் வணிகங்களும், நீங்கள் விரும்பும் வீடுகளும் அல்லாஹ்வை விடவும் அவனுடைய வழியில் அறப்போர் செய்வதை விடவும் உங்களுக்கு விருப்பமிக்கதாக இருப்பின் அல்லாஹ் முடிவை வெளியாக்கும் வரை நீங்கள் எதிர்பார்த்து இருங்கள். அதாவது, உங்கள் அன்பு பொய்யானது என்பதை நிரூபிக்கும் ஒரு தீர்ப்பு, மேலும் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்குப் பதிலாக நீங்கள் அவனது வெறுப்பைப் பெறுவீர்கள். அவன் கூறுகின்றான், அல்லாஹ் ஃபாஸிக்கீன் -களை (கீழ்ப்படியாதவர்களை) வழிநடத்துவதில்லை. (சூரா தவ்பா வசனம் 24)

திருக்குர்ஆன் ‘ஃபிஸ்க்’ என்பதை வரையறுத்துள்ளது, ஆனால் ‘ஃபிஸ்க்’ என்பதன் இந்த வரையறையை உலகின் எந்த புத்தகத்திலும் நீங்கள் காண முடியாது. பொதுவாக ‘ஃபிஸ்க்’ என்பது ஒரு பாவத்தைச் செய்வது அல்லது வெறுக்கத்தக்க செயலை செய்வது என்று நாம் நினைத்தோம், ஆனால் திருக்குர்ஆன் அன்பை பற்றிய உரையாடலில் ‘ஃபிஸ்க்’ -ஐச் சேர்த்து, அன்பு இல்லாதது ‘ஃபிஸ்க்’ என்று அறிவித்துள்ளது. அல்லாஹ்வுக்குப் பிறகு ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை நேசிப்பது கட்டாயம் என்று அது கூறுகிறது. நீங்கள் அவரை நேசிக்கவில்லை என்றால் நீங்கள் ஒரு ஃபாசிக். கேள்வி என்னவென்றால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை நேசிக்காதது ஃபிஸ்க்குடன் எவ்வாறு தொடர்புடையது? வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த உறவை விளக்கியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வின் கீழ்ப்படிதலில் கழிந்தது. அதிலிருந்து சிறிதும் விலகவில்லை. அது வேறு விதமாக இருந்திருந்தால், அல்லாஹ் நம்மை அவர்களை பின்பற்றும்படி கட்டளை இட்டிருக்க மாட்டான். அல்லாஹ் நம்மை அவர்களை பின்பற்றும்படி கட்டளையிட்டிருப்பதால், அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற்றது என்பதை நாம் அறிவோம். அல்லாஹ்வின் கீழ்ப்படிதலுக்கு முரணான எந்தவொரு செயலும் '∴பிஸ்க்' ஆகும். இவ்வாறு திருக்குர்ஆன் '∴பிஸ்க்' என்பதை அன்பின் அடிப்படையில் அற்புதமாக வரையறுத்துள்ளது: அல்லாஹ்வின் பாதையில் தனது வாழ்க்கையை செலவிட்ட ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களை நீங்கள் நேசிக்கவில்லை என்றால், அதாவது, அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் மேற்கொண்ட ஜிஹாதை நீங்கள் மதிக்கவில்லை என்றால், நீங்கள் '∴பாஸிகீன்' போன்றவர்கள். அவர்களுடைய சுன்னத்தில் இருந்து (நடைமுறையில்) நீங்கள் எங்கு விலகிச் சென்றாலும் நீங்கள் '∴பிஸ்க்' செய்கிறீர்கள். அல்லாஹ் '∴பாஸிகீனை' வழிநடத்துவதில்லை.

## ஜிஹாத் மீதான அன்பின் உண்மையான பொருள்:

இங்கே அல்லாஹ் ஜிஹாத் (∴பீ ஸபீலில்லாஹ்) (அல்லாஹ்வின் பாதையில் பாடுபடுதல்) என்று குறிப்பிட்டுள்ளான். இதேபோல் ஜிஹாதை (∴பீஸபீலில்லாஹ்) நேசிக்கச் சொல்ல முடியும் என்று கற்பனை செய்வது கடினமாக.




இருப்பினும், இங்கே ∴பீ ஸபீலில்லாஹ் என்பது வாளுடன் ஜிஹாத் செய்வதை மட்டும் குறிக்காது. திருக்குர்ஆனின் கூற்றுப்படி, அன்பானவரைத் தேடுவதற்காக எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் ஜிஹாத் ஆகும். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை நேசிக்கச் சொன்ன பிறகு ஜிஹாத் ஸபீலில்லாஹ் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் ஒரு ஜிஹாத் என்பதைக் குறிக்கிறது. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்போதும் வாளுடன் நடக்கவில்லை அல்லது கையில் வில் மற்றும் அம்பை ஏந்தவில்லை.

கஸ்வாத் (போர்களில்) கூட அவர்களுக்கு நேரடியாகப் போராட வேண்டிய அவசியம் அரிதாகவே இருந்தது. மக்காவில் 13 ஆண்டு கால கடுமையான ஒடுக்குமுறையின் போதும் ஜிஹாதில் ஈடுபட்டார்கள். எனவே ஜிஹாத் என்பது மற்றவர்களுடன் சண்டையிடுவது மட்டுமல்ல, ஒடுக்குமுறைக்கு ஆளாகி காயப்படுத்தப்பட்டு, வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வின் அன்பில் மூழ்கி இருப்பதும் ஜிஹாத் ஆகும். நீங்கள் இந்த முறையில் அன்பு செலுத்தவில்லை என்றால், அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்துவதாக நீங்கள் கூறுவது பொய்யானது மட்டுமல்ல. அல்லாஹ்வின் பார்வையில் நீங்கள் ஒரு ∴பிஸ்க்கான வாழ்க்கையையும் வாழ்கிறீர்கள்.

## அன்பின் மிக உயர்ந்த சான்று:

மிகவும் கண்டிப்பான கட்டளை. உண்மையில்! ஆனால் கேள்வி என்னவென்றால், ஒருவர் கட்டளையினால் நேசிக்க முடியுமா? அன்பு செலுத்தும் கட்டளை அன்பை உருவாக்க முடியுமா? இந்தக் கருத்தை நான் முன்பே எழுப்பியிருந்தேன். அன்புக்கும் கட்டளைக்கும் எந்த தொடர்பும் இல்லை. நீங்கள் ஒருவரை எவ்வளவு நேசித்தாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தை நேசிக்கத் தொடங்கச் சொன்னால், உங்களுக்கு என்ன நடந்தது என்று அவர் ஆச்சரியப்படுவார். நீங்கள் பைத்தியமாகி விட்டீர்களா? ஒருவேளை சிலர் இவ்வாறும் சொல்லலாம்.

تمہیں چاہوں تمہارے چاہنے والوں کو بھی چاہوں

میرا دل پھیر دو مجھ سے جھگڑا ہو نہیں سکتا

"நீ விசித்திரமான நிபந்தனைகளை விதிக்கிறாய் அதாவது நான் உன்னை நேசிக்க வேண்டும் என்று நான் உன்னை நேசிக்கும் அனைவரையும் நேசிக்கத் தொடங்க வேண்டும் என்பதாகும். என் இதயத்தை என்னிடம் திருப்பித் தாருங்கள்! என் இதயத்தைத் திருப்பித் தாருங்கள், இந்தக் குழப்பத்தில் நான் ஈடுபட முடியாது."

ஆனால், அல்லாஹ் மிகவும் புனிதமானவன்! இதுதான் அவனுடைய சரியான கட்டளை: "என்னை நேசி, என்னை நேசிப்பவர்களையும் நேசி. என்னை நேசிப்பவர்களை நீங்கள் நேசிக்கவில்லை என்றால், நீங்கள் ஒரு '∴பாஸிக்'. உங்கள் அன்பு நிராகரிக்கப்படும். இது ஒரு ஞானம் நிறைந்த சொற்றொடர் ஆகும்! உண்மையான அன்பின் மிக உயர்ந்த சான்று என்னவென்றால், உங்கள் எஜமானர் நேசிக்கும் அனைவரிடமும் நீங்கள் அன்பு செலுத்துவது. உங்கள் அன்புக்குரியவர்களை நேசிப்பவர்கள் மீதான உங்கள் அன்பு வலுவடைகிறது, மேலும் அவர்கள் மீது உங்களுக்கு எந்த வெறுப்பும் இல்லை.

திருக்குர்ஆன் இந்த விஷயத்தை ஒரு பிரார்த்தனையில் விளக்கியுள்ளது. அது நமக்குக் கற்றுக் கொடுத்தது என்னவென்றால், அல்லாஹ், நம்பிக்கை கொண்டவர்களுக்கும், நம்பிக்கையில் எங்களுக்கு முந்தியவர்களுக்கும் எதிராக எங்கள் இதயங்களில் எந்த வெறுப்பையும் விட்டு விடாதே. தவறான புரிதல் காரணமாக கூட, எங்கள் இதயங்கள் அவர்களைப் பற்றி எந்தத் தீய எண்ணங்களையும் கொண்டிருக்க வேண்டாம் என்று நாங்கள் உன்னிடம் வேண்டுகின்றோம்.

இந்த வசனம் ஷியா தத்துவத்தை நிரந்தரமாக மறுக்கிறது. இப்போதெல்லாம் சில ஷியாக்கள் நம்பிக்கையில் சிறந்து விளங்கியவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும் விஷயங்களைச் சொல்கிறார்கள். திருக்குர்ஆன் நமக்கு இந்த பிரார்த்தனையைக் கற்றுக் கொடுத்துள்ளது: அல்லாஹ், ஆரம்ப காலகட்டத்தின் (இஸ்லாத்தின்) விசுவாசிகள் நம்பிக்கையில் நம்மை மிஞ்சி விட்டார்கள்! அவர்களை நாம் வெறுக்க வேண்டாம். வரலாறு அல்லது தவறான கதைகள் பற்றிய தவறான புரிதல் அல்லது தவறான புரிதலின் விளைவாக நம் இதயங்கள் அவர்களுக்கு எதிராகக் கடினமடையக் கூடும் என்பதால், அல்லாஹ் 'அவர்களுக்காக

நம் இதயங்களை மென்மையாக வைத்திருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனையைக் கற்றுக் கொடுத்தான். காரணம் என்ன? அவர்கள் அல்லாஹ்வை நேசித்தார்கள் என்பது மட்டும்தான். அதே பொருள்: நீங்கள் என்னை நேசித்தால், நேசிப்பவர்களை நேசிப்பது. ஒற்றுமைக்காக நான் இல்லாமல் சாத்தியமற்றது. இதுதான் அதன் தத்துவம் (ஒற்றுமை). இறைவன் மீதான அன்பு போட்டிக்கு வழிவகுத்திருந்தால், போட்டி அனுமதிக்கப்பட்டிருந்தால், இறைவனை நேசித்தவர் -களைப் போலவே இறைவனைப் பற்றிய பல கருத்துகள் இருந்திருக்கும். மேலும் ஒரு முஸ்லிம் தேசம் என்ற கேள்வியே இருக்காது. இறைவனை நேசித்த ஒவ்வொருவரும் இறைவனை நேசித்த மற்ற அனைவரையும் பார்த்து பொறாமைப்பட்டு, அவரை வெறுத்து, 'நான் நேசிக்கும் அதே கடவுளை நேசிப்பதற்கு அவர் யார்?' என்று நினைத்திருப் -பார்கள்.

## புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அன்பின் ஓர் உயர்ந்த, அழகான மற்றும் முழுமையான போதனை:



அல்லாஹ் இந்த உலகத்தின் மீது அத்தகைய தவறான அன்பை விட்டுச் சென்றிருக்கிறான். தனக்காகவே, பரிபூரண ஒற்றுமையை ஊக்குவிக்கும் அன்பின் வகையைத் தேர்ந்தெடுத்துள்ளான், அதன் சுற்றளவு விரிவடைந்து கொண்டே செல்கிறது. அதனால்தான், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நேசிக்கும்படி அல்லாஹ் நமக்கு அறிவுறுத்தியுள்ளான். உலகின் மற்ற எல்லா மதங்களையும் பாருங்கள். திருக்குர்ஆன் அன்பைப் பற்றி கற்பிக்கும் விவரங்கள், ஞானம் மற்றும் பரஸ்பர உறவையோ அல்லது இதே போன்ற போதனையையோ அழகான, முழுமையான மற்றும் ஒருங்கிணைந்ததாகக் காண முடியாது. முதலாவதாக, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும் என்ற கட்டளையோ அல்லது வற்புறுத்தலோ இல்லை, ஏனென்றால் அவர் அன்பிற்குத் தகுதியானவர். இதை ஆதரிக்க, அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நேசிக்கிறான், அது உங்களுக்கு போதுமானது என்று கூறுகிறான். ஒருவர் தன்னை விட அழகான ஒருவரை நேசிக்கும் வாய்ப்பு குறைவு. ஒருவர் எவ்வளவு அழகாக இருக்கிறாரோ, அவ்வளவுக்கு அவரது அழகின் தரம் உயர்ந்ததாக இருக்கும். எனவே இந்த வசனம் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அழகின் மிகப்பெரிய சான்றைக் கொண்டுள்ளது, அதாவது, அவர் மிகவும் அழகானவர், நான் (அல்லாஹ்) அவரை நேசிக்கிறேன். மேலும் நான் அவரை மிகவும் நேசிக்கிறேன் - நீங்கள் அவரைப் பின்பற்றி அவரை நேசித்தால், நான் உங்களை நேசிப்பேன்.

புனித நபி (ஸல்) அவர்களின் பண்புகளை மீண்டும் மீண்டும் குறிப்பிட வேண்டும்: இவ்வாறு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உள்ளார்ந்த அழகு உள்ளது. இந்த அழகு அறிவிக்கப்பட வேண்டும். இது பற்றிப் பேசப்பட வேண்டும், மேலும் அது மாநாடுகளின் கருப்பொருளாக இருக்க வேண்டும். இளைஞர்களும் முதியவர்களும் அதனுடன் தனிப்பட்ட பரிச்சயத்தைக் கொண்டிருக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

بن دیکھے کس طرح کسی مہ رخ پہآئے دل
کیسے کوئی خیالی ضم سے لگائے دل

அழகிய அழகை ஒருவர் அதைப் பார்க்காமல் எப்படி நேசிக்க முடியும்?

ஒரு கற்பனையான அன்பரை எப்படி நேசிக்க முடியும்?

ஹஸ்ரத் (முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிக்கும் படி திருக்குர்ஆன் நமக்குக் கட்டளையிட்டுள்ளது. அல்லாஹ்வின் அன்பான அன்பைப் பற்றி சொல்லி திருக்குர்ஆன் நமக்கு ஓர் உதவியைச் செய்துள்ளது. அவருடைய அன்பு நம் இதயங்களில் அல்லாஹ்வின் மீது அன்பை உருவாக்கும், அதன் விளைவாக அல்லாஹ் நம்மை நேசிக்கத் தொடங்குவான். நேர்த்தியான அழகைப் பார்க்காமல் பேரன்பு கொள்வது கடினம். எனவே, ஹஸ்ரத் (முஹம்மது நபி) அவர்களின் (அழகை)க் காட்டுவது அவசியமாகும்.

இஸ்லாத்தின் வெற்றியின் அடுத்த நூற்றாண்டை நாம் நெருங்கி வருவதால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் வரலாறு குறித்து அடிக்கடி மாநாடுகள் நடத்தப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு நான் (ஜமாஅத்துக்கு) அறிவுறுத்தினேன், இதனால் அவர் -களது ஏராளமான பக்தியுள்ள நேசர்கள் அடுத்த நூற்றாண்டில் நுழையத் தயாராக முடியும். அது வெற்று இதயங்களுடன் இஸ்லாத்தின் ஆதிக்கம் குறித்து பெரிய கோஷங் -களை எழுப்பும் (ஒரு பயணக் கூட்டமாக) இருக்கக் கூடாது, மாறாக அல்லாஹ்வின் மீதும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் மீதும் அன்பால் நிறைந்த இதயங்களைக் கொண்ட மக்களாக இருக்க வேண்டும், மேலும் அவர்களின் நரம்புகளில் இந்த அன்பு அவர்களின் சொந்த இரத்தத்தைப் போல ஓடுகிறது. இந்த ஏற்பாடு இல்லாமல் அடுத்த நூற்றாண்டின் தலைமுறையினரின் வாழ்க்கையில் எந்த பெரிய மாற்றத்தையும் நீங்கள் கொண்டு வர முடியாது.

ஒரு சிறந்த நூற்றாண்டு நமக்காகக் காத்திருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் பல முக்கிய சாதனைகள் நிறைவேற்றப்படும். மக்கள் நம்மிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும், மேலும் நம்மிடமிருந்து கற்றுக் கொள்வதன் மூலம் அடுத்த நூற்றாண்டை நோக்கி முன்னேற வேண்டும். எனவே, அந்த நேரம் வருவதற்கு முன்பு, புதிய நூற்றாண்டில் நுழைவதற்கு முன்பு, அல்லாஹ்வையும் பரிசுத்த நபியையும் நேசிப்பதன் விளைவாக வெளிப்படும் அந்தப் பரிபூரண அழகால் நம்மை அலங்கரிக்க முயற்சிக்க வேண்டும்.

## திருத்தூதர் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மற்றொரு கண்ணியமான அம்சம்:

திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள புனித நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்கான மற்றொரு காரணம், அல்லாஹ்வே அவருக்குக் கீழ்ப்படிய வேண்டிய விதத்தைக் கற்றுக் கொடுத்தான்:

اِتَّبِعۡ مَاۤ اُوۡحِیَ اِلَیۡکَ مِنۡ رَّبِّکَ ۚ لَاۤ اِلٰہَ اِلَّا ہُوَ ۚ وَاَعۡرِضۡ عَنِ الۡمُشۡرِکِیۡنَ

(அல் அன்ஆம் வசனம் 107)

அல்லாஹ் உனக்கு வெளிப்படுத்துவதைப் பின்பற்று... மேலும் இணைவைப்பாளர்களிடமிருந்து விலகி, வேறு யாரையும் கவனிக்காதே. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதல் என்பது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிதலில் இருந்து வேறுபட்டதல்ல. "நீங்கள் என்னை நேசித்தால் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசியுங்கள்" என்று சொல்வதன் மூலம், அல்லாஹ் நம்மிடம் தொடர்பில்லாத ஒருவரை நேசிக்கச் சொல்கிறான் என்று யாரும் நினைக்கக் கூடாது. அல்லாஹ்வே தனது சொந்த உருவத்தில் கற்பித்து வடிவமைத்து, அதன் மூலம் தனது அழகை நம்மைக்குள் கொண்டு வந்த ஒரு நபரை நேசிக்கச் சொல்லப்படுகிறோம். ஒரு மனிதனுக்கு அவன் பின்பற்றவும் நேசிக்கவும் கூடிய ஒரு மனித மாதிரி தேவை. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் கஅபாவுக்குள் நுழைந்ததும், சிலர் சிலைகளை அலங்கரிப்பதைக் கண்டார்கள். அவர்கள் அவற்றை நிமிர்த்தி வைத்து, அவற்றின் காதுகளில் காதணிகளை வைத்து அவற்றை அலங்கரித்தனர். சிலைகளை அலங்கரித்த பிறகு, அவர்கள் சிலைகளுக்கு முன் விழுந்து வணங்கினர். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் அவ்வாறு செய்வதற்கான காரணத்தைக் கேட்டார்கள். அவர்கள் பதிலளித்தார்கள்.

"நாங்கள் அவைகளை வணங்குகிறோம்; நேசிக்கிறோம். ஏனென்றால், அவைகள் (சிலைகள்) இறைவனை எப்படி நேசிப்பது என்று நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. மேலும் அவைகளின் அன்பின் மூலம் நாம் இறைவனின் அன்பைப் பெறுகிறோம்."

இந்த சம்பவம் நடந்த அதே நாளில் இந்த திருக்குர்ஆனின் வசனம் இறங்கியது.

قُلۡ اِنۡ کُنۡتُمۡ تُحِبُّوۡنَ اللّٰہَ فَاتَّبِعُوۡنِیۡ یُحۡبِبۡکُمُ اللّٰہُ

(ஆல் இம்ரான் வசனம் 32)

எவ்வளவு அபத்தம்! என்று அல்லாஹ் கூறுகிறான். "சிலைகளிடமிருந்து அல்லாஹ்வை எப்படி நேசிக்கக் கற்றுக் கொள்ள முடியும்? அவை ஒருவரைப் பின்பற்றும் திறன் கொண்டவை அல்ல. பின்பற்றத் தகுதியானவையுமல்ல. இறைவனை எப்படி நேசிக்க வேண்டும் என்று கற்றுக் கொள்ளப்பட்ட ஒருவரிடமிருந்து இறைவனின் அன்பைக் கற்றுக் கொள்ள முடியும்."

பின்னர் அல்லாஹ் புனித நபி (ஸல்) அவர்களிடம் கூறுகிறான்: "இது உங்கள் கூற்று என்றால் (நீங்கள் அல்லாஹ்வை நேசிக்க விரும்புகிறீர்கள்) என்றால் என் அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள். ஏனென்றால் அல்லாஹ் அவனை எப்படி நேசிக்க வேண்டும் என்று எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளான். சிலைகளைப் பின்பற்றுவதன் மூலம் அல்லாஹ்வை நேசிக்கக் கற்றுக் கொள்ள முடியாது."

## ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மீது முழுமையான அன்பும், அவர்களுக்கு முழுமையான கீழ்ப்படிதலைக் கற்பித்தலும்:

அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அன்பை விவரித்திருக்கிறான் அல்லது திருக்குர்ஆனில் வேறொரு இடத்தில் அவர்களது கீழ்ப்படிதல் முறையை விவரித்திருக்கிறான் என்று சொல்ல வேண்டும். இந்த வசனம் 'என் மக்கள்....' என்று தொடங்குகிறது. ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம், 'என் மக்கள்...." என்று கூறுவதன் மூலம் மக்களுக்கு அறிவிக்கவும், மனித குலத்திற்கு அறிவிக்கவும் என்று கூறப்படுகிறது. திருக்குர்ஆனின் சில விரிவுரையாளர்கள் இந்த வார்த்தைகளால் குழப்பமடைந்தனர், மேலும் இறைவனின் முழுமையான ஒற்றுமையின் செய்தியைக் கொண்டு வந்த ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் ஏன் இவ்வாறு கூறுமாறு அறிவுறுத்தி -னான் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை:

قُلۡ یٰعِبَادِیَ الَّذِیۡنَ اَسۡرَفُوۡا عَلٰۤی اَنۡفُسِہِمۡ

(சூரா அஸ்ஸுமர் வசனம் 54)

'என் மக்களே...' வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட முறை எழுதியுள்ளார்கள், மேலும் அதை மிகவும் நுட்பமான மற்றும் அழகான முறையில் விளக்கியுள்ளார்கள்.

ஓரிடத்தில் அவர்கள் எழுதுகிறார்கள்: இங்கே 'இபாதீ' என்றால் மக்கள் அல்ல, ஊழியர்கள் என்று பொருள். எனவே இதன் பொருள் முஹம்மத் (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

என் ஊழியர்கள் இங்கே பின்தொடர்வது என்ற பாடம் உவமை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் 'இத்தபியூனீ' என்று அறிவிக்கச் சொல்லும்போது, 'என்னை அடிமைத்தனமான முறையில் நேசி' என்று பொருள்.

ஓர் அடியார் தன் எஜமானை நேசித்து கீழ்ப்படிந்து, அவருக்குக் கீழ்ப்படிக்க மறுக்காமல் இருப்பது போல, நீங்களும் பரிசுத்த நபி (ஸல்) அவர்களை மிகவும் முழுமையாக நேசிக்க வேண்டும், அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்க இயலாதவர்களாக மாற வேண்டும், அதாவது, உங்கள் அனைத்து சக்திகளும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிய வேண்டும்.

அதற்கான காரணத்தை புனித குர்ஆன் வேறொரு இடத்தில் கூறுகிறது:

قُلۡ اِنَّ صَلَاتِیۡ وَنُسُکِیۡ وَمَحۡیَایَ وَمَمَاتِیۡ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۙ

(சூரா அல்அன்ஆம் வசனம் 163)

நான் உங்களுக்குச் சொல்கிறேன், என் அடியார்கள் ஆகுங்கள். உங்களிடம் உள்ள அனைத்தையும் எனக்குக்

கொடுங்கள். ஒரு பேரன்பன் என்னைப் பின்பற்றுவது போல் என்னைப் பின்பற்றத் தொடங்குங்கள். எனக்கு தனிப்பட்ட முறையில் ஏதேனும் சிறப்புப் பண்புகள் இருப்பதால் அல்ல. ஆனால் நான் என்னிடம் இருந்த அனைத்தையும் விட்டுக் கொடுத்து விட்டேன். நான் எனக்காக எதையும் வைத்திருக்கவில்லை. மேலும் அல்லாஹ் என்னை இந்த அறிவிப்பைச் செய்யும்படி கூறியுள்ளான்: 'குல் இன்ன ஸலாதீ வநுஸ்கீ,' எனது அனைத்து பிரார்த்தனைகள் மற்றும் அவற்றின் ஒவ்வோர் அம்சமும், எனது அனைத்து நோன்புகள், எனது அனைத்து தியாகங்கள் மற்றும் அவற்றின் ஒவ்வோர் அம்சமும், எனது மரணம் மற்றும் எனது வாழ்க்கை, அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது.

இவ்வாறு, அல்லாஹ், 'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அடிபணியுங்கள்' என்று கூறும்போது, ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு அடிபணியச் சொல்லவில்லை, மாறாக, தனது மனித சுயத்தை அழித்து, அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிந்த ஒரு மனிதனுக்கு அடிபணியச் சொல்லுகிறான். இது செய்யப்பட்டால், அனைத்து வெகுமதிகளுக்கான கதவுகளும் திறக்கும். ஆனால், வெகுமதிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மாறாக, மற்றோர் அம்சம் விளக்கப்படுகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ

(சூரா அஸ்ஸுமர் வசனம் 54)

பாவங்களைச் செய்தவர்கள், மலைகளைப் போல் பெரிய பாவங்கள் இருந்தாலும், பயப்படத் தேவையில்லை. அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி அடியார்களைப் போல அவரைப் பின்பற்றினால், அவர்களின் அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும். ஏனெனில் அல்லாஹ் அனைத்து பாவங்களையும் மன்னிக்கும் சக்தி கொண்டவன். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவர்கள் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியாராக மாற வேண்டும். இவ்வாறு, இந்த வசனம், ஓர் இரட்சகர், நமக்காக துன்பப்பட்டு சபிக்கப்பட்டார் என்ற முத்தெய்வக் கருத்தை மறுக்கிறது. அல்லாஹ்வுக்கு முழுமையாகவும் தன்னைக் கீழ்ப்படுத்தியவரைப் பின்பற்ற விரும்பினால், பாவிகளாக இருப்பதால் நீங்கள் அவரைப் பின்பற்ற முடியாது என்று கவலைப்படக் கூடாது என்று இந்த வசனம் கூறுகிறது. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களைப் பின்பற்ற நாம் யார்? என்று நீங்கள் கேட்கலாம். அத்தகைய பயங்கள் இதயத்தை ஆக்கிரமிக்கக் கூடும்.

அல்லாஹ்கூறுகிறான்: இல்லை; நீங்கள் இந்த நபரைப் பின்பற்றினால், நீங்கள் உணருவீர்கள்:

اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا

(சூரா அஸ்ஸுமர் வசனம் 54)

ஏனென்றால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைகளும், வழிகளும் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவையாகும். அவனுடைய பொருட்டும், அவனுக்குக் கீழ்ப்படிவதன் விளைவாகவும் நீங்கள் பெறும் அழகின் காரணமாகவும், அவன் உங்களது பாவங்களை மன்னிப்பான்.

اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

(சூரா அஸ்ஸுமர் வசனம் 54)

நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கிறான்.

(தொடரும்...)




Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam